# 2018

# செயலாற்றுகை அறிக்கை

புத்தசாசனம் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சு

**புத்தசாசனம் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சு**

# தொலை நோக்கு

‘‘பௌத்த பழக்கவழக்கங்களை பின்பற்றும் ஒழுக்க மேம்பாடுடைய சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் பணியின் முன்னோடியாகத் திகழ்தல்’’

# பணிக்கூற்று

**“பௌத்த விகாரைகளை மையமாகக் கொண்டு,பௌத்த மத போதனைகளின் அடிப்படையில் அனைத்து தரப்பினரதும் பங்களிப்புடன் கொள்கைகள் மற்றும் நிகழ்சிகளை ஒருங்கிணைத்து செயற்படுத்துவதன் மூலம் சிறந்த ஜீவனோபாயத்தைக் கொண்ட ஒழுக்கமேம்பாடுடைய சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு துணைபுரிதல்”**

## பொருளடக்கம்


| விடயம் | பக்க இலக்கம் |
|---|---|
| பிரவேசம் | 01 |
| அமைச்சு நிறுவப்பட்டதன் பின்னணி மற்றும் நோக்கம் | 02 |
| 1. புத்தசாசனம் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சு | 02 |
| - அமைச்சின் பணிகள் | 02 |
| - வழிமுறைகள் | 01 |
| - புத்தசாசன அமைச்சின் பிரதான நாட்குறிப்பு | 03 |
| - புத்தசாசன அமைச்சின் நிர்வாகக் கட்டமைப்பு | 06 |
| - அமைச்சின் வெற்றிடங்கள் | 07-08 |
| - புத்தசாசன அமமைச்சுடனான தொடர்புகள் | |
| 2. நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திப் பணிகள் | |
| 2.1. அபிவிருத்திப் பணிகளின் பௌதீக மற்றும் நிதி நிலை முன்னேற்றம் | 12 |
| 2.2. அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றம் | 12-13 |
| 2.2.1. புனித பூமி அபிவிருத்தி | 17-19 |
| 2.2.2. வித்யாலங்கார சர்வதேச மாநாட்டு மண்டப நிர்மாணம் | 20-22 |
| 2.2.3. வசதி குறைந்த அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் | 22-24 |
| 2.2.4. வசதி குறைந்த விகாரைகளை அபிவிருத்தி செய்தல் | 24-26 |
| 2.2.5. வலுவாதாரம்மிக்க புண்ணிய கிராமம் நிகழ்ச்சித்திட்டம் | 27-31 |
| 2.2.6. புராண விகாரைகளை புனரமைத்தல் | 32 |
| 2.2.7. சமயப் புரிந்துணர்வு மற்றும் அந்நிய மொழி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 34 |
| 2.2.7.1. சமயப் புரிந்துணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 35-36 |
| 2.2.7.2 அந்நிய மொழி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 37-38 |
| 2.2.8. நேபாளத்தில் பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட விகாரைகளை புனரமைத்தல் | 38-40 |
| 2.2.9. பாரம்பரிய கண்டிய நடனம் மற்றும் கலாசார உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஸ்ரீ தலதா மாளிகையுடன் இணைந்து பல்லேகலையில் பயிற்சி நிறுவனம் ஒன்றை நிறுவுதல் | 40-43 |

3. விசேட கருத்திட்டங்கள்

3.1. சாக்கிய குடியிருப்பினை மீண்டும் நிர்மாணிக்கும் கருத்திட்டம் 44

4. வேறு அபிவிருத்திப் பணிகள் 45-46

- புதுடில்லி இலங்கை யாத்திரிகர் விடுதி
- நேபாளத்தின் லும்பிணி நகரில் அமைந்துள்ள ஸ்ரீ லங்கா மகா விகாரையின் அபிவிருத்திப் பணிகள்
- நேபாளத்தின் லும்பிணி நகரில் அமைந்துள்ள துட்டகைமுனு யாத்திரிகர் விடுதி
- அநுராதபுரம் குருந்தம்குளம் யாத்திரிகர் விடுதி

5. விசேட உற்சவங்கள்

- அரச வெசாக் உற்சவம் 46
- ஸ்ரீமான அனகாரிக்க தர்மபால அவர்களின் 154 ஆவது பிறந்த தின் கொண்டாட்டம்

6. அபிவிருத்தி சேவைகள் 47

- விகாரைகளுகான நாளேடுகளை அச்சிடுதல் மற்றும் பகிர்ந்தளித்தல் 41

7. தகவல் தொழிநுட்ப மற்றும் அபிவிருத்திப் பிரிவு 42-43

8. பௌத்த ஆலோசனை சபை கூட்டங்களை நடாத்துதல் - 2018 வருடம் 48

9. மாதாந்த முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல்கள் **48-49**

10. இளைஞர், விளையாட்டு, கலை மற்றும் உரிமைகள் தொடர்பான 49

பாராளுமன்ற கண்காணிப்பு குழு கூட்டத்தில் பங்குபற்றல் 49

11. நிதி முகாமைத்துவம் தொடர்பாக பின்பற்றப்படும் செயன்முறை 49-50

12. உள்ளக கணக்காய்வு திட்டமிடல் 51

13. புத்தசாசன நிதியம் 51-54

14. வடமேல் அபிவிருத்தி செயலகம் **55-60**

# அறிமுகம்

## “நற்பண்புகள் நிறைந்த ஒழுக்க மேம்பாடுடைய சமூகமொன்று”

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பில் இந்நாட்டில் புத்த சமயத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதுடன், புத்தசாசனத்தைப் பாதுகாத்தல், போஷித்தலுக்கு தேவையான நிதியுதவியை வழங்குவதுடன் ஏனைய அனைத்து சமயங்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இச்சிந்தனைக்கு அமைவாக “மைத்ரீ ஆட்சி ஸ்திரமான நாடு” என்னும் கொள்கைப் பிரகடனத்தின் இருபத்தைந்தாம் பக்கத்தில் “அனைத்து சமயங்களையும் பின்பற்றும் மக்களுக்கு தத்தமது சமய சழிபாடுகளை மேற்கொள்வதற்கான சுதந்திரம் உறுதிப்படுத்தப்படும்” எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நோக்கத்தை அடையும் பொருட்டு பொருத்தமான கருத்திட்டங்களை சமூகமயப்படுத்துவதுடன் அனைத்து இலங்கையர்களிடத்தும் நற்பண்புகளை மேம்படுத்தும் வகையிலான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவது புத்தசாசன அமைச்சின் கடமையாகக் காணப்படுகின்றது. இதன் காணமாகவே புத்தசாசன அமைச்சானது ஏனைய அமைச்சுக்களை விடவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

நற்பண்புகள் நிறைந்த பிரஜைகளைக் கொண்ட தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை கால தாமதமின்றி நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு ஜனாதிபதி அவர்களினால் எப்போதும் வலியுறுத்தப்படுவதற்கான காரணம் யாதெனில் சிந்தனை ரீதியாக மேம்பட்ட மக்களைக் கொண்ட தேசத்தைக் கட்டியெழுப்புவது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாக காணப்படுகின்றமையாகும். இனங்களுக்கிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் வகையிலான கருத்துக்களை மக்களுக்கு வழங்கும் முகமாக புத்தசாசன அமைச்சானது தொடர்ந்தும் மக்களுக்கான சமய ரீதியிலான வழிகாட்டியாக செயற்பட்டு வருகின்றது.

அதற்கமைய புத்தசாசன அமைச்சானது அதன் கீழ் இயங்கும் பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து இந்த நோக்கத்தை அடையும் பொருட்டு முக்கியத்துவம் வாய்ந்த பல பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

# அமைச்சு நிறுவப்பட்டதன் பின்னணியும் நோக்கமும்

**“இலங்கை குடியரசானது புத்த சமயத்திற்கு முன்னுரிமை வழங்குகின்றது”**

(இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு)

இதன் 10 ஆவது அத்தியாயம் மற்றும் 14 அத்தியாயத்தின் (இ) பந்தியில் அனைத்து சமயங்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன், புத்தசாசனத்தைப் போஷித்து பாதுகாப்பது அரசின் கடமை எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

## 1. புத்சாசன அமைச்சு

### 1.1. அமைச்சின் பணிகள்

- ஒழுக்க மேம்பாடுடைய சமூகமொன்றை கட்டியெழுப்புவதன் பொருட்டு சமயச் செயற்பாடுகளில் மக்களை ஈடுபடுத்தும் முகமாக பௌத்த மத அலுவல்கள் திணைக்களம், புத்தசாசன நிதியம் போன்ற நிறுவனங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றைத் தயாரித்தல்.
- புத்த தர்மத்தை பாதுகாத்து போஷிப்பதற்கும் அதனை பிரபல்யப்படுத்துவதற்கும் உகந்த நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தல்.
- புத்த தர்மத்துடன் தொடர்புடைய நிகழ்வுகளை நடாத்துவதுடன் அவை பற்றிய அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல்.
- புனித பூமிகளை திட்டமிடுவதும் அவற்றை அபிவிருத்தி செய்வதும்.
- சர்வதேச மட்டத்தில் தேரவாத பௌத்த தர்மத்தை பிரசாரம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பிக்குமார்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
- பௌத்த மத அலுவல்கள் திணைக்களம் மற்றும் புத்தசாசன நிதியம் என்பவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள ஏனைய பணிகள் தொடர்பான செயற்பாடுகள்.
- பௌத்த மத அலுவல்கள் திணைக்களம் மற்றும் புத்தசாசன நிதியம் போன்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.

## 1.2. வழிமுறைகள்

**மேலே குறிப்பிடப்பட்ட பணிகளை இலகுவில் நிறைவேற்றும் பொருட்டு கீழுள்ள அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டன.**

- தொழில் மற்றும் செயல் ரீதியிலான சிக்கல்களை இல்லாமற் செய்யும் நோக்கத்துடன் பிக்குமார்களுடனும் மக்களுடனும் இணைந்து செயற்படுதல்.
- ppub(அரச நிறுவனங்களுடனான தொடர்புகள்) மற்றும் PPP(அரச, தனியார் நிறுவனங்களுக்கிடையிலான தொடர்புகள்) போன்ற தேவைகளுக்கேற்ப அணுகுதல்.
- நிர்வாகப் பணிகளின் போது தேவைப்படும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தேவையான தகவல்களை அடிப்படையாகக் கொண்ட தகவல் தொழிநுட்ப வலையமைப்பொன்றை நிர்மாணித்தல்.
- புதிய முகாமைத்துவ வழிமுறைகளைப் பின்பற்றுதல்.
- பெது மக்களுடன் சிறந்த நட்புறவைப் பேணுவதற்குரிய வழிமுறைகளை அறிமுகப்படுத்தல்.
- தேசிய வளங்கள் மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்குரிய சாட்சிகளை நிர்மாணித்தல், நிகழ்கால உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஒலி, ஒளி, எழுத்து ஊடகங்களைப் பாதுகாத்தல்.

### 1.3. புத்தசாசன அமைச்சின் பிரதான செயல்பட்டியல்

- நவீன யுகத்திற்கேற்ப நற்கருத்துக்களை சமூகத்தில் விதைக்கும் வகையில் அறநெறிக் கல்வியை சிறந்த வகையில் மறுசீரமைத்தல்.
- சமய, சமூக, நற்பண்புகளையும், புத்தசாசனத்தையும் மேம்படுத்தும் வகையில் தகவல், தொழிநுட்பத்துறையைப் பயன்படுத்தி பௌத்த மதத்வர்களையும் பௌத்த வழிபாட்டுத் தலங்களையும் அபிவிருத்தி செய்தல்.
- பௌத்த கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை பாதுகாப்பதுடன் எதிர்கால சந்ததியினரின் பொருட்டு பௌத்த வழிபாட்டுத் தலங்களை புனரமைத்து பேணும் ஊடகமாகச் செயற்படுதல்.
- பொது மக்கள் திருப்திப்படும் வகையிலும், உள்நாட்டு, வெளிநாட்டு யாத்திரிகர்களின் மனதைக் கவரும் வகையிலும் பௌத்த வழிபாட்டுத் தலங்களைப் புனரமைத்தல்
- தேரவாத பௌத்த தர்மத்தை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பிரசாரம் செய்தல்.
- இலங்கையில் வாழும் அனைத்து இனங்களையும் மதங்களையும் சார்ந்த மக்களிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தி நற்பண்புகள் நிறைந்த ஒழுக்கமேம்பாடுடைய நாட்டைக் கட்டியெழுப்புதல்.

## 1.4 அமைச்சின் பிரதான பிரிவுகளும் அவற்றின் கடமைகளும்

பௌத்த சமய பண்பாட்டினைப் பேணுதலுடன் சிறந்த நற்பண்புளைக் கொண்ட நாட்டைக் கட்டியெழுப்பும் பணியின் முன்னோடியாகத் திகழ்வதன் பொருட்டு புத்தசாசன அமைச்சானது 05 பிரதான பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

அவை,

1) நிர்வாகப் பிரிவு
2) அபிவிருத்திப் பிரிவு
3) கணக்கியல் பிரிவு
4) புனித பூமி பிரிவு
5) புத்தசாசன நிதியம்
6) வடமேல் அபிவிருத்தி செயலகம்

### <u>நிர்வாகப் பிரிவு</u>

புத்தசாசன அமைச்சின் இலக்குகளை அடையும் நோக்குடன் அமைச்சின் வசமுள்ள மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்து வழிநடத்தும் பணியானது நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலதிக செயலாளரின் கீழ் (நிர்வாகம் மற்றும் நிதி) இயங்கும் இப்பரிவினால் கீழுள்ள பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

1. அமைச்சின் அனைத்து நிர்வாகப் பணிகள்.
2. நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அனைத்து அதிகாரிகளினதும் பிரத்தியேகக் கோவைகளை வழிநடத்துதல்.
3. அமைச்சின் வாகனங்கள் தொடர்பான பணிகள்.
4. அமைச்சுக் கட்டிடத்தின் பரிபாலனம்.
5. அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் அலுவலகங்களின் பரிபாலனம் மற்றும் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
6. அமைச்சில் இடம்பெறும் உற்சவங்கள் தொடர்பான பணிகள்.
7. பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் பரிபாலனம் மற்றும் மேற்பார்வை செய்தல்.
8. அமைச்சின் தொலைபேசிக் கட்டணங்களை செலுத்துதல்.
9. அமைச்சுக் கட்டிடத்தின் வரிப்பணம் செலுத்துதல் மற்றும் மின்கட்டணத்தைச் செலுத்துதல்.
10. அமைச்சின் சுத்திகரிப்பு பணிகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பணிகளை மேற்கொள்ளுதல்.
11. அமைச்சரவைப் பத்திரங்களை சமர்ப்பித்தல் மற்றும் அமைச்சுக்குரிய சட்டமூலங்கள் தொடர்பான பணிகள்.

12. வீசா பிரிவின் பணிகள்

- வெளிநாடுகளில் இருந்து வருகை தரும் வண. மதகுருமார்கள் மற்றும் சிவில் பிரஜைகளுக்குரிய வீசா சிபாரிசுக் கடிதங்களை விநியோகித்தல். (வருகைக்கான அனுமதி வீசா, தங்குவதற்கான வீசா மற்றும் வீசா நீடித்தலுக்கான சிபாரிசுகளைப் பெற்றுக்கொடுத்தல்)
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிக்குமார்களுக்கான வீசா சிபாரிசுக் கடிதங்களை விநியோகித்தல்.
- தம்பதிவ யாத்தரை முகவர்களைப் பதிவு செய்தல்.
- தம்பதிவ யாத்திரிகர்களுக்கான வீசா சிபாரிசுக் கடிதங்களை விநியோகித்தல்.
- தம்பதிவ யாத்திரை தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தல்.

13. உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகளை வழங்கதல்

**<u>அபிவிருத்திப் பிரிவு</u>**

அரசானது வரவு செலவுத்திட்டத்தின் மூலம் பௌத்த சமயத்தின் வளர்ச்சிக்கு வேண்டி வழங்கும் நிதியினை அரசின் கொள்கைகளுக்கு ஏற்ப அனுகூலமான முறையில் பயன்படுத்தி அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதன் மூலம் நற்பண்புகள் நிறைந்த ஒழுக்கமேம்பாடுடைய சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதன் பொருட்டு திட்டங்களை வகுத்தல், நடைமுறப்படுத்தல் மற்றும் முன்னேற்றம் பற்றிய அறிக்கைளைப் பெற்றுக்கொள்ளல், மேற்பார்வை செய்தல் என்பன அபிவருத்திப் பிரிவின் பிரதான பணிகளாகும். மேலதிக செயலாளரின் கீழ் (அபிவிருத்தி) இயங்கும் இபிபரிவினால் கீழுள்ள பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

1. அமைச்சினால் முன்னெடுக்கப்படும் பலதரப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களை திட்டமிடுதல், நடைமுறப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
2. வருடாந்த செயற்திட்ட அறிக்கையை தயாரித்தல்.
3. அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய திணைக்களங்களின் முன்னற்றம் பற்றிய கலந்துரையாடல்களை நடாத்துதல்.
4. அமைச்சின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி விடயத்துடன் தொடர்புடைய அமைச்சரவைப் பத்திரங்களை தயாரித்தல் மற்றும் அவற்றுக்கான தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பணிகள்.
5. அமைச்சினால் செயற்படுத்தப்படும் அனைத்து உள்நாட்டு / வெளிநாட்டு நிர்மாணக் கருத்திட்டங்கள் தொடர்பான பணிகளை செயற்படுத்துதல், மெற்பார்வை செய்தல்.
6. நூல்களை அச்சிடுதல் மற்றும் வருடாந்த நாட்குறிப்புகளை அச்சிடுதல்.
7. அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய திணைக்களங்களின் அபிவிருத்திப் பணிகளுடன் தொடர்புடைய விடயங்களை மேற்பார்வை செய்தல்.

8. அமைச்சு வேறு நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளும் விசேட கருத்திட்டங்கள் தொடர்பான பணிகள்.

9. அமைச்சின் இணையத்தளத்தை தரவேற்றம் செய்து செயற்படுத்துதல்.

10. மக்களிடையே சமயப் புரிந்துணர்வை ஏற்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்படும் பலதரப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

11. ஊடகங்கள் தொடர்பான அமைச்சின் பணிகள்.

## புனித பூமி அபிவிருத்திப் பரிவு

புராதன முக்கியத்துவம் வாய்ந்த, வரலாற்றுப் புகழ்மிக்க ஒவ்வொரு சமய வழிபாட்டுத் தலங்களினாலும் பிரதேச ரீதியாக மேற்கொள்ளும் சமய மற்றும் சமூக செயற்பாடுகளின் அடிப்படையில் அவற்றை 1946 இன் 15 ஆம் இலக்க கிராம மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்திற்கு அமைய வர்த்தமானியில் பிரகடனப்படுத்தி அபிவிருத்தி செய்தல் இப்பிரிவின் பணியாகும்.

அதற்கமைய சமய முக்கியத்துவம், தொல்பொருள் முக்கியத்துவம், அமைவிட முக்கியத்துவம், கலாசார முக்கியத்துவம், பொருளாதார மற்றும் சமூக முக்கியத்துவம் போன்ற விடயங்களைக் கருத்திற்கொண்டு சமய வழபாட்டுத்தலங்களின் அபிவிருத்திக்கான நிதியை வழங்குதல் இப்பிரிவின் பிரதான பணியாகும்.

## புத்தசாசன நிதியம்

பௌத்த பாரம்பரியத்தைப் பேணும், நற்பண்புகளைக் கொண்ட ஒற்றுமைமிக்கதோர் சமூகத்தைத் தோற்றுவிக்கும் பொருட்டு சம்புத்த சாசனத்தைப் பாதுகாத்து போஷிக்கும் முகமாக பிக்குமார்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் விகாரைகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் புத்தசாசனத்தின் நிலையுறுதியின் பொருட்டு இயங்கி வருகின்றது.

இதன்பொருட்டு கீழுள்ள கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

01. சாமனேர நிறுவனங்கள் இயங்குவதற்கு தேவையான நிதியை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்.
02. சாமனேர நிறுவனங்களில் வருட இறுதிப் பரீட்சைகளை நடாத்துதல்.
03. சம்புத்தத்வ சாமனேர நிதயுதவி வழங்கும் திட்டம்.
04. நாட்டிலுள்ள அனைத்து பிக்குமாரகளுக்குமான வைத்தியச் செலவுகளை பெற்றுக்கொடுத்தல்.
05. முதுமைப் பருவத்தில் துறவறத்தில இணைந்து கொண்டவர்களுக்கு துறவு வாழ்க்கை பற்றிய பிரயோகப் பயிற்சியைப் பெற்றுக்கொடுத்தல்.
06. நாடாளாவிய ரீதியில் அமைந்துள்ள வசதி குறைந்த விகாரைகளில் மலசல கூடங்களை அமைப்பதற்கான நிதியுதவியை வழங்குதல்.
07. நாடாளாவிய ரீதியில் அமைந்துள்ள வசதி குறைந்த விகாரைகளில் பிக்குமார்களுக்கான வாசஸ்தலங்களை நிர்மாணித்தல்.

08. சீன மொழி மற்றும் கலாசார கற்கை நிலையத்தை நிறுவுதல்.

## <u>வடமேல் அபிவிருத்தி செயலகம்</u>


*2015 செப்டம்பர் மாதம் 21 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1933/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தாபிக்கப்பட்டது. வடமேல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக இல.129, தம்புள்ளை வீதி, குருணாகல் என்ற இடத்தில் வடமேல் அபிவிருத்திச் செயலகம் நிறுவப்பட்டு வடமேல் மாகாணத்தில் பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பல அமுல்படுத்தப்படுவதுடன், 2018 மே மாதம் 12 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2070/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி அமைச்சு எனத் திருத்தப்பட்டது.*

### வடமேல் அபிவிருத்தி அமைச்சிற்கு உரித்தாக்கப்பட்ட விடயங்களும் பணிகளும்

*1. வடமேல் மாகாண பொருளாதார, உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக் கருத்திட்டங்களை ஒருங்கிணைப்புச்செய்தலும் அதுசார்ந்த கொள்கைகளை வகுத்தமைத்தலும் அவற்றை அமுல்படுத்தலும்.*

*வடமேல் அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கிணைப்புச்செய்வதற்கு ஒரு செயலகத்தை நிறுவுதல்.*

## 1.5 நிர்வாக கட்டமைப்பு – புத்தசாசனம் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சு அமைச்சு



**1.6.புத்தசாசன அமைச்சுடனான தொடர்புகளுக்கு**

**அமைவிடம் -** புத்தசாசன அமைச்சு, "தஹம்பாய", இல – 135, ஸ்ரீமான் அனகாரிக்க தர்மபால மாவத்தை, கொழும்பு – 0.7

**இணையத்தளம் - www.mbs.gov.lk**

**தொலைபேசி இலக்கம் - 011 - 2307674**

**தொலைநகல் இலக்கம் - 011 -2307406**

## கௌரவ அமைச்சர் அவர்களின் அலுவலகம்

| பதவிப் பெயர் | தொலைபேசி இலக்கம் | தொலைநகல் இலக்கம் | உள்ளக தொடர்பு இலக்கம் |
|---|---|---|---|
| கௌரவ காமிணீ ஜயவிக்ரம பெரேரா அவர்கள் (புத்தசாசன அமைச்சர்) | 011 - 2303285 | - | 601 |
| ஆசங்க சதீர பெரேரா அவர்கள் (பிரத்தியேக செயலாளர்) | - | - | 603 |
| சுஜாதா தர்மவர்தன (இணைப்புச் செயலாளர்) | 011 - 2303279<br>011 - 2303285 | | 602 |
| ந்திரபிரேம கமகே அவர்கள் (அமைச்சரின் ஆலோசகர்) | 011 - 2303270 | - | 606 |
| மனோஜ் தம்பரகே (ஊடக செயலாளர்) | 011-2300511 | 011-2307335 | 605 |
| முக்கள் தொடர்பாடல் அதிகாரி | 0113071801 | - | 608 |

அமைச்சின் உத்தியோகத்தர்கள் பற்றிய விபரம்

| பதவிப் பெயர் | தொலைபேசி இலக்கம் | தொலைநகல் இலக்கம் | உள்ளக தொடர்பு இலக்கம் | கையடக்க தொலைபேசி இலக்கம் - வீடு |
|---|---|---|---|---|
| திரு.ஏ.பி.ஜீ. கித்சிறி அவர்கள் (செயலாளர்) | 011-2307430 | 011-2307406 | 400 | 071-2264500 |
| திருமதி. அமரசிங்ஹ அவர்கள் - மேலதிக செயலாளர் (நிர்வாகம்) | 011-2307690 | 011-2307688 | 300 | 011-2780812 |
| திருமதி. சந்தியா குமுதினி டி சில்வா அவர்கள் - (பிரதான நிதி அதிகாரி) | 011-2307398 | | | |
| திருமதி ஜீ. என் முனவீர அவர்கள் அவர்கள் - பிரதான (கணக்காளர்) | 0112307673 | 011-2307691 | 301 | 071-6377403 |
| திரு. ருச்சிர விதான அவர்கள் - பணிப்பாளர் (புனித பூமி) | 011-2307693 | 011-2307405 | 406 | 071-0174253 |
| திருமதி யூ.எஸ்.கே. தெனாவத்தை அவர்கள் (சிரேஷ்ட உதவிச் செயலாளர்) | | | | |
| திருமதி. சம்பிகா கனேறு அவர்கள் - பணிப்பாளர் (அபிவிருத்தி) | 011-2303294 | | 207 | |
| திரு.டப்ளிவ்.பி.என் விஜேசங்க அவர்கள் - (பிரதான உள்ளக கணக்காய்வாளர்) | 011-2307699 | | 212 | 071-8095900 |
| திருமதி. ஆர்.ஏ.என். பிரியதர்ஷனீ அவர்கள் - உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | 011-3119876 | | 403 | |
| திரு. ஜே.எம்.கே.டி. ஜயசேகர அவர்கள் - உதவி செயலாளர் (அபிவிருத்தி) | 011-2307409 | | 407 | 071-8015305<br>071-2381045 |

| | | | | |
|---|---|---|---|---|
| திரு. லஹிரு ஹெட்டியாரச்சி - அவர்கள் உதவி செயலாளர் (நிர்வாகம்) | 011-2303287 | | 302 | 071-3544339 |
| உதவி செயலாளர் (பௌத்த மத அலுவல்கள்) | 011-2307689 | | 309 | வெற்றிடம் |
| திரு. டி.எஸ். சுனில் சமரசிங்ஹ அவர்கள் - நிர்வாக உத்தியோகத்தர் (ப.நோ.) | 011-2307402 | | 305 | 071-8002919 |
| திரு. எஸ்.கே.பி. சிறிவர்தன அவர்கள் - செயலாளரின் இணைப்புச் செயலாளர் | 011-2307905 | | 410 | 0778579057 |
| புத்தசாசன நிதியம் | 011-3158874 | 011-2679969 | | |
| அரச கணக்காய்வுப் பிரிவு | 011-2307401 | | 205 | |
| ரஜரட்ட சுற்றுலா விடுதி | 026-2226556 | | | |
| தகவல் தொழிநுட்ப பிரிவு | 011-2307095 | | 506 | |
| தேசிய போதை பொருள் தடுப்பு பிரிவு | 011-5769730 | 011-2303295 | | |
| அலுவலகம் | 0112307694<br>0112307674 | | | |
| இணையம் | 0112307697 | | | |
| உதவி செயலாளர்(தொழிற்சங்கம்) | 0113100672 | | | |
| சாசனப் பாதுகாப்பு சபை | 0112307178 | | | |
| பௌத்த கலைக்களஞ்சியம் | 0112679718 | | | |

## 2018.12.31 அன்று உள்ளவாறான அமைச்சின் பணியாள்தொகுதியில் நிலவும் பதவி வெற்றிடங்கள் பற்றிய விபரம்

| தொ. இல. | பதவி | ஏற்புடைய சேவை | தரம் | சம்பள குறி-யீடு | சேவை மட்டம் | அனுமதித்த எண்ணிக்கை | | | தற்போதுள்ள எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | நிரந்தர | ஓப்பந்தி | பதில் | நிரந்தர | ஓப்பந்தி | பதில் | பிற |
| 1 | செயலாளர் | இ.நி.சே. | விசேட | SL4 | 1 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 2 | மேலதிக செயலாளர் | இ.நி.சே. | விசேட | SL3 | 1 | 3 | 0 | 0 | | 1 | 0 | 0 |
| 3 | பிரதான நிதி உத்தியோகத்தர் | இ.க.சே. | | | 1 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 4 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | இ.நி.சே. | I | SL1 | 1 | 2 | 0 | 0 | 2 | 0 | 0 | 0 |
| 5 | பணிப்பாளர் | இ.நி.சே. | I | SL1 | 1 | 2 | 0 | 0 | 2 | 0 | 0 | 0 |
| 6 | பிரதான கணக்காளர் | இ.க.சே. | I | SL1 | 1 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 7 | உதவிச் செயலாளர் | இ.நி.சே. | III | SL1 | 1 | 4 | 0 | 0 | 2 | 0 | 0 | 0 |
| 8 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (பொறியியல்) | இ.பொ.சே. | III/II | SL1 | 1 | 2 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 9 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | இ.தி.சே. | II/II, II/I | SL1 | 1 | 2 | 0 | 0 | 2 | 0 | 0 | 0 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | கணக்காளர் | இ.க.சே. | II/II, II/I | SL1 | 1 | 2 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 11 | பிரதான உள்ளக கணக்காய்-வாளர் | இ.க.சே. | II/II, II/I | SL1 | 1 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 12 | சட்ட உத்தியோகத்தர் | திணைக்கள | III/II | SL1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 13 | உதவிச் செயலாளர் (தொழில் உறவுகள்) | தற்காலிக | | SL1 | | 0 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 |
| 14 | நிர்வாக உத்தியோகத்தர் | அ.மு.உ.சே. | அதி விசேட வகுப்பு | MN7 | 2 | 2 | 0 | 0 | 1 | 0 | 0 | 1 |
| 16 | மொழி-பெயர்ப்பாளர் | மொ.சே. | | MN6 | 2 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 17 | செயலாளரின் இணைப்புச் செயலாளர் | தற்காலிக | | | | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 |
| 18 | வரவு செலவுத்திட்ட உதவியாளர் | | | MN4 | 3 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 19 | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | இ.தொ.சே. | தரம் 2 II/I | MN6 | 3 | 3 | 0 | 0 | 2 | 0 | 0 | 0 |
| 20 | அபிவிருத்தி உதவியாளர் | | | MN4 | 3 | 12 | 0 | 0 | 4 | 0 | 0 | 0 |
| 21 | திட்டமிடல் உதவியாளர் | | | MN4 | 3 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 22 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | இணைந்த சேவை | III | MN4 | 3 | 95 | 0 | 0 | 55 | 0 | 0 | 0 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23 | தொழில்நுட்ப உதவியாளர் | இ.தொ.சே. | | MN3 | 3 | 5 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 24 | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ.சே. | I,II,III | MN2 | 3 | 38 | 0 | 0 | 39 | 0 | 0 | 0 |
| 25 | இடக் காப்பாளர் | அ.மு.உ.சே. | I,II,III | MN2 | 3 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 26 | வரவேற்பு உத்தியோகத்தர் | திணைக்கள | | MN1 | | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 27 | கமரா இயக்குநர் | திணைக்கள | | MT1 | | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 |
| 28 | வீடியோ கமரா இயக்குநர் | திணைக்கள | | MT1 | | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 |
| 29 | சாரதி | இ.சா.சே. | | PL3 | 4 | 24 | 0 | 0 | 19 | 0 | 0 | 0 |
| 30 | கமரா இயக்குநரின் உதவியாளர் | திணைக்கள | | PL1 | | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 |
| 31 | அலுவலகப் பணி உதவியாளர் | அ.ப.உ.சே. | I,II,III, SP | PL1 | 4 | 26 | 0 | 0 | 20 | 0 | 3 | 0 |
| 32 | சமையற்காரர் | திணைக்கள | | PL2 | 4 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 33 | தொழிலாளி | திணைக்கள | | PL1 | 4 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 34 | துப்புர-வேற்பாட்டுத் தொழிலாளி | திணைக்கள | | PL1 | 4 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| | **மொத்தம்** | | | | | **239** | **1** | **0** | **154** | **5** | **3** | **1** |

**2018.12.31 அன்றுள்ளவாறு சேவை மட்டம் வாரியான பணியாள்தொகுதியினர் பற்றிய பொழிப்பு**

| சேவை மட்டம் | அனுமதித்த பதவியினர் | சேவையிலுள்ள பதவியினர் |
|---|---|---|
| சிரேஷ்ட | 23 | 16 |
| மூன்றாம்நிலை | 03 | 03 |
| இரண்டாம்நிலை | 160 | 102 |
| தொடக்கநிலை | 54 | 42 |
| **மொத்தம்** | **240** | **163** |

** பணியாள்தொகுதியினர் பற்றிய பொழிப்பில் வடமேல் அபிவிருத்திச் செயலகத்தின் பணியாள்தொகுதியினரும் அடங்குவர்.*

# 2. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்

## 2.1 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் நிதி மற்றும் பௌதிக ரீதியான முன்னேற்றத்தின் பொழிப்பு

2018 ஆம் ஆண்டில் அரச வரவுசெலவுத்திட்டத்தின்மூலம் புத்தசாசனம் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சினால் அமுல்படுத்தப்படும் புனித பூமிகள் அபிவிருத்திக் கருத்திட்டத்தின்கீழ் (101-2-1 செலவுத்தலைப்பின் கீழ்) 1,065.00 மி.ரூ. நிதிஒதுக்கீடு வழங்கப்பட்டது. அதன்கீழ் வருடாந்தம் அமுல்படுத்தப்படும் 05 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் விசேட கருத்திட்டங்களாக அமுல்படுத்தப்படும் 04 கருத்திட்டங்களும் சார்பாகவும் வரவுசெலவுத்திட்ட பிரேரணை ஒன்றின்மூலம் அமுல்படுத்தப்படும் 01 கருத்திட்டம் சார்பாகவும் நிதிஒதுக்கீடுசெய்து வழங்கப்பட்டது. அவ்வக் கருத்திட்டங்கள் பற்றிய பகுப்பாய்வுசெய்யப்பட்ட விரிவான தகவல்கள் இதன் பிந்திய பகுதிகளில் விபரிக்கப்பட்டுள்ளன.

## 2.2 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதிலான முன்னேற்றம்

| இல. | நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் (ரூ.மி.) | கருத் திட்ட காலம் (இருந்து -வரை) | நிதி மூலம் | நிதிசார் முன்னேற்றம் | | பௌதிக ரீதியான முன்னேற்றம் 2018 |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2018 நிதி ஒதுக்கீடு (ரூ.மி.) | செலவு (2018.12.31 அன்று உள்ளபடி) | |
| 1 | வித்தியாலங்கார பௌத்த மாநாட்டு மண்டபத்தை | 1350 | 2005 - 2017 | இலங்கை அரசாங்கம் | 121.0 | 115.49 | கட்டம் V 100% (முழு மொத்த முன்னேற் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | நிர்மாணித்தல் (கட்டம் 05) | | | | | | றம் 90%) |
| 2 | நேபாளத்தில் புவி அதிர்வினால் சேதமடைந்த விஹாரை களைப் புனரமைத்தல் (ஆனந்தகுட்டி மஹா விஹாரை மற்றும் ராத்தோ மச்சிந்திரநாத் இந்துக் கோயில்) | 450.0 | 2016 - 2018 | இலங்கை அரசாங்கம் | 155.0 | 116.9 | 90% |
| 3 | ஸ்ரீ தலதா மாளிகையுடன் இணைக்கப் பட்டுள்ள அரங்காட்டுகைப் பயிற்சி நிலையத்தை நிறுவுதல். | 145.0 | 2016 - 2019 | இந்திய/ இலங்கை அரசாங்கம்<br>GOSL | 94.0 | 44.58 | 35% |
| 4 | புனித பகுதிகளின் (பூஜா பூமி) அபிவிருத்தி. | 102.0 | ஒரு வருடாந்த நிகழ்ச்சித் திட்டம் | இலங்கை அரசாங்கம் | 102.0 | 101.7 | 100% |
| 5 | அபிவிருத்தி குன்றிய விஹாரை-களின் அபிவிருத்தி. | 220.0 | ஒரு வருடாந்த நிகழ்ச்சித் திட்டம் | இலங்கை அரசாங்கம் | 220.0 | 198.07 | 574 விஹாரைகள் 98.35% |
| 6 | புண்ணிய கிராமங்கள் நிகழ்ச்சித் திட்டம் | 50.0 | ஒரு வருடாந்த நிகழ்ச்சித் திட்டம் | இலங்கை அரசாங்கம் | 50.0 | 40.0 | 86 கிராம-ங்கள் |
| 7 | பிற மொழிகள் ஊக்குவிப்பும் மத சகவாழ்வும் | 5.0 | ஒரு வருடாந்த நிகழ்ச்சித் திட்டம் | இலங்கை அரசாங்கம் | 5.0 | 4.42 | 05 நிகழ்ச்சித் திட்டங்கள் |
| 8 | அபிவிருத்தி குறைந்த அறநெறிப் பாடசாலைகள் அபிவிருத்தி. | 140.0 | ஒரு வருடாந்த நிகழ்ச்சித் திட்டம் | இலங்கை அரசாங்கம் | 140.0 | 133.51 | 693 அறநெறிப் பாடசா-லைகள் 95% |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| *9* | பௌத்த கலைக் களஞ்சி யத்தைக் கணினி மயப்படுத்தல். | 3.0 | | இலங்கை அரசாங்கம் | 3.0 | 1.21 | 25% |
| *10* | புராதன விஹாரை-களை மீட்டளித்தல் மற்றும் புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | 175.0 | *(2018* வரவு செலவுத் திட்ட பிரேரணை இல. *161)* | இலங்கை அரசாங்கம் | 175.0 | 141.26 | *91* புராதன விஹாரைகள் *95.78%* |

(குறிப்பு 01)

## 2.2.1. புனித பகுதிகள் (பூஜா பூமி) அபிவிருத்தி

- **அறிமுகம்**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் *1993/3* ஆம் இலக்க, *2015* செப்டம்பர் மாதம் *21* ஆந் திகதி, திங்கட்கிழமை வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் செய்யப்பட்ட அறிவிப்பின் பிரகாரம் புத்தசாசனம் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சிற்கு உரித்தாக்கப்பட்ட புனித பகுதிகளைத் (பூஜா பூமி) திட்டமிடுதலும் அபிவிருத்திசெய்தலும் என்ற விடயத்தின் பிரகாரம் குறித்துரைக்கப்பட்டுள்ள காணிகள் பிரதேசத்தின் நிலைபேறான பாதுகாப்பிற்காக அப்பகுதியை புனித பூமி ஒன்றாக வர்த்தமானியின் மூலம் பிரகடனம் செய்யப்படுகிறது.

யாதேனுமொரு விஹாரையை அல்லது தேவாலயத்தை புனித பகுதியொன்றாக அடையாளம் கண்டு வர்த்தமானியில் பிரகடனம்செய்வதும் அத்தகைய புனித பகுதியை அபிவிருத்திசெய்வதும் அமைச்சின் செயற்பொறுப்பாகும். பௌதிக திட்டமிடல் திணைக்களமும் நிலஅளவைத் திணைக்களமும் இவ்விடயத்தில் உதவுகின்றன.

**புனித பகுதியொன்றைப் பிரகடனம்செய்யும்போது கவனத்திலெடுக்கப்படும் விடயங்கள்:**

- மத ரீதியான முக்கியத்துவம்.
- வரலாற்று ரீதியான முக்கியத்துவம்.
- தொல்லியல் ரீதியான முக்கியத்துவம்.
- கலாசார ரீதியான முக்கியத்துவம்.
- கட்டிடக்கலை நுட்ப ரீதியான முக்கியத்துவம்.
- சுற்றாடல் ரீதியான முக்கியத்துவம்.
- பொருளாதார மற்றும் சமூக ரீதியான முக்கியத்துவம்.

***2018.12.31 ஆந் திகதியன்று உள்ளவாறான புனித பகுதிகள் அபிவிருத்தி செலவு விடயத்தின் மூலதனச் செலவுகள் சார்ந்த முன்னேற்றம்***





*புத்தசாசனம் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சின்கீழ் செயற்படுத்தப்படும் புனித பகுதிகள் (பூஜா பூமி) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2018 ஆம் ஆண்டில் தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் 100 மி.ரூ. நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்நிதிஒதுக்கீடுகளில் இருந்து 2017 ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளுக்கு செலுத்தித் தீர்க்கப்படாத விலைப்பட்டிகளுக்காக மாவட்ட செயலாளர்களின் கோரிக்கைப்படி 16.85 மி.ரூ. நிதி ஒதுக்கப்பட்டது.*

*2018 ஆம் ஆண்டில் அரச வெசாக் வைபவத்தை முன்னிட்டு குருணாகல் மாவட்டத்தின் பிங்கிரிய தேவகிரி ரஜமஹா விஹாரையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளுக்காக 46.59 மி.ரூ. நிதிஒதுக்கப்பட்டது. மேற்படி அபிவிருத்திப் பணிகள் முப்படையினரின் உழைப்புரீதியான பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டதுடன், அடிப்படைத் திட்டங்களுக்கும் நிர்மாணங்களுக்குமான சிபார்சுகளுக்கு பௌதிகத் திட்டமிடல் திணைக்களத்தின் மேற்பார்வை பெறப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்ட புனித பகுதிகள் அபிவிருத்திப் பணிகள் உள்ளிட்ட 18 அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு நிதிஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளதுடன், அதன் நிதிசார் முன்னேற்றம் 100% சதவீதமும் பௌதிக முன்னேற்றத்தின் சராசரி 100% சதவீதமும் ஆகும்.*

### புனித பகுதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2018
### (2018.12.31 அன்றுள்ளவாறான பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம்)

| மாவட்டம் | அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு (ரூ.மி.) | முழு மொத்தம் | பூர்த்திசெய்த கருத்திட்டங்களின் எண்ணிக்கை 75% - 100% | 2018.12.31 அன்று உள்ளவாறான செலவு மி.ரூ. |
|---|---|---|---|---|
| கண்டி | 2.25 | 2 | 2 | 2.25 |
| மாத்தறை | 2.62 | 1 | 1 | 2.62 |
| அம்பாறை | 1.58 | 1 | 1 | 1.58 |
| குருணாகல் | 58.97 | 2 | 2 | 58.97 |
| அநுராதபுரம் | 5.00 | 2 | 2 | 5.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| பதுளை | 24.56 | 1 | 1 | 24.56 |
| திருகோணமலை | 1.17 | | | 1.17 |
| இரத்தினபுரி | 3.30 | | | 3.30 |
| பிற | 2.25 | | | 2.25 |
| கையிலுள்ள விலைப்பட்டிகள் | | 9 | 9 | |
| **முழு மொத்தம்** | **101.7** | **18** | **18** | **101.7** |

(குறிப்பு 02)

**2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018.12.31 அன்றுள்ளவாறான புனித பகுதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்**

| ஆண்டு | புனித பகுதிகள் எண்ணிக்கை | பிரகடனம் செய்யப் பட்ட புனித பகுதிகள் எண்ணிக்கை | 2018.09.30 அன்றுள்ள வாறான மொத்த புனித பகுதிகள் எண்ணிக்கை | உதவி வழங்கப் பட்ட புனித பகுதிகள் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீட்டு அளவு (ரூ.மி.) | செலவு (டிசம்பர் 31 அன்று உள்ளவாறு (ரூ.மி.) |
|---|---|---|---|---|---|---|
| 2016 | 109 | 01 | 110 | 71 | 100.00 | 106.58 |
| 2017 | 110 | 02 | 112 | 73 | 100.00 | 102.17 |
| 2018 | 112 | - | 112 | 09 | 101.7 | 101.70 |

(குறிப்பு 04)

2018 ஆம் ஆண்டிற்கான செலவில் 2017 ஆம் ஆண்டில் கையிலுள்ள விலைப்பட்டிகளைச் செலுத்தித் தீர்ப்பதற்கு செலவிடப்பட்ட தொகை 16.84 மி.ரூ. தொகையும் அடங்கும்.

## 2.2.2. களனி வித்யாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டபத்தை நிர்மாணித்தல்

பௌத்த கல்வி மறுமலர்ச்சிக்கு முன்னோடியாக விளங்கிய கல்விமான்களுக்கு ஒரு கௌரவமாகவும் தேரவாத பௌத்த தருமத்தை உலகில் பிரசித்தப்படுத்துவதற்கான ஒரு



பௌத்த கல்வி மத்தியநிலையமாகவும் விளங்கும் பௌத்த சமூகத்திற்கு அவசியமான கல்வி ஆராய்ச்சி இயலாற்றல்கள், பயிற்சிகளுக்கு அவசியமான வசதிகளை வழங்கும் ஒரு நிலையத்தின் தேவையை நிறைவேற்றுவதை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட வித்யாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டபத்தின் நிர்மாணப் பணிகள், 2005 ஆம் ஆண்டு முதல் அரசாங்க நிதியை முதலீடுசெய்து நிர்மாணித்து பூர்த்தி செய்யப்படும் தறுவாயில் உள்ளது.



இந்த நவீன மாநாட்டு மண்டபத்தில் ஒரே தடவையில் சுமார் 1400 பேர் அமரக் கூடியதாக நவீன வசதிகளைக் கொண்ட பிரதான கேட்போர் கூடமொன்றும் சுமார் 400 ஆசனங்களைக் கொண்ட 02 கூட்ட மண்டபங்களும் 350 அங்கத்தவர்களுக்கு ஒரே தடவையில் இருக்கக்கூடிய கண்காட்சி மண்டபம் ஒன்றையும் சர்வதேச மாநாட்டு மண்டபமொன்றில் இருக்கவேண்டிய வசதிகளுக்கு இணையாக குளிரூட்டல் தொகுதிகள், தீயணைப்பு, பாதுகாப்பு முறைகள், களஞ்சியசாலை, சிறப்பு


அதிதிகளின் கூடங்கள், குழாய்நீர்த் தொகுதிகள், வலையமைப்பாக்கத் தொகுதிகள், பொது தொடர்புகொள்ளல் தொகுதிகள், உணவுக் கூடங்கள், துப்புரவேற்பாட்டு வசதிகள், உள்ளக மற்றும் வெளியக வாகனசாலை வசதிகளையும் கொண்டது.

2005 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இக்கருத்திட்டம், 02 பிரதான நிரல் அமைச்சுக்களான நகர அபிவிருத்தி மற்றும் புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சு, புத்தசாசனம் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் மேற்பார்வையின்கீழ் (முன்னாள் புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சும் அடங்கலாக) 13 வருட காலத்தில் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தந்த அமைச்சுக்களினால் ஒவ்வோர் ஆண்டிலும் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதில் வழங்கிய பங்களிப்பையும் நிதிஒதுக்கீடு பெறுவனவுகளையும் செலவு நிலைமைகளையும் கீழ்க் காணலாம்.

| அமைச்சு | ஆண்டு | திறைசேரி நிதிஒதுக்கீடு (ரூ.மி.) | செலவு (ரூ.மி.) |
|---|---|---|---|
| நகர அபிவிருத்தி மற்றும் புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சு | 2005 -2012 | 507.30 | 431.72 |
| புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு | | 896.00 | 772.61 |
| புத்தசாசனம் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சு | 2013 | | |
| | 2014 | | |
| | 2015 | | |
| | 2016 | | |
| | 2017 | | |
| | 2018 | | |
| **மொத்தம்** | | **1403.30** | **1204.33** |

(குறிப்பு 05)

2018 ஆம் ஆண்டளவில் கருத்திட்டத்தின் திருத்திய மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 1,350 மி.ரூ. ஆகும். அதேபோல் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் புத்தசாசன அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் இக்கருத்திட்டம் இயங்கி வந்துள்ளது. 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் அளவில் இக்கருத்திட்டத்தின் ஐந்தாம் கட்டப் பணிகள் பூர்த்தியடைவது வரையான மொத்தச் செலவு 1,204.33 மி.ரூ. என்பதுடன், கருத்திட்டத்தின் ஐந்தாம் கட்டத்தின் மதிப்பீட்டுச் செயற்பாடுகளில் 100% சதவீத முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கும் மொத்தக் கருத்திட்டத்தில் 90% முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கும் அது துணிந்துள்ளது. கருத்திட்டத்தின் 2018.12.31 அன்றுள்ளவாறான பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம் குறிப்பு 1.1 இல் காட்டப்பட்டுள்ளது.





மேலும், இக்கருத்திட்டம் குறுகிய காலத்துள் பூர்த்திசெய்யப்பட்டு கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்குக் காரணமாக அமைந்த நோக்கங்களை அடைந்துகொள்ளும் எதிர்பார்ப்புடனும் அதற்குச் செலவிடப்பட்ட மூலதன முதலீட்டின் விளைவுப் பெருக்கத்தை அதிகரித்துக்கொள்வதற்கும் அமைச்சரவைத் தீர்மானங்களின் சிபார்சுகளின் அடிப்படையில் அதன் நிலைபேறான இருப்பை உறுதிப்படுத்துவதற்கும் நம்பிக்கைப்பொறுப்புச் சபையொன்று நியமிக்கப்பதற்கு அவசியமான சட்ட ஆவணங்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, செயற்பாட்டு முகாமைத்துவத்திற்காக முகாமைச் சபையொன்றை நிறுவுவதற்கும் அம்முகாமைச் சபையின்மூலம் வியாபாரத் திட்டமொன்றைத் தயாரித்து இம்மாநாட்டு மண்டபத்தை சேவைகளை வழங்கும் நிலைக்கு மாற்றி வருமான உருவாக்கச் செயன்முறையொன்றின்பால் வழிப்படுத்துவதற்கும் அவ்வருமானத்தைக்கொண்டு மாநாட்டு மண்டபத்தின் செயற்பாட்டு, நிர்வாக, முகாமைத்துவ செலவுகளை ஈடுசெய்து கொள்வதற்கும் அதனைத்தொடர்ந்து மீதியாகும் மிகை வருமானத்தை வித்யாலங்கார பிரிவேனாவின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்திக்கொள்வதற்கும் உரிய யோசனைகளுடன் நம்பிக்கைப்பொறுப்பு உறுதியொன்று வரையப்பட்டுள்ளது. இந்த யோசனைகள் அடங்கியதாக வரையப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பு உறுதி, சட்ட ஆலோசனை பெறுவதற்காக அனுப்பி வைக்கப்படவுள்ளது.
இக்கருத்திட்டத்தின் முக்கிய கட்டங்களாக பிரதான கேட்போர்கூடம் *2019* ஆம் ஆண்டு தொடக்கம் சேவைகளை வழங்குவதற்காக திறந்துவைக்கும் ஒரு முறைமையில் ஈடுபட்டுள்ளது.

## 2.2.3. அபிவிருத்தியிற் குறைந்த அறநெறிப் பாடசாலைகளை (தஹம் பாசல்) அபிவிருத்திசெய்யும் நிகழ்ச்சித்திட்டம்

*2018 ஆம் ஆண்டில் வசதியிற் குறைந்த அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்திசெய்யும் நிகழ்ச்சித்திட்டத்தை மூன்றாண்டுத் திட்டமொன்றாக அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டது. அதன்படி, மாவட்டம்தோறும் அமைந்துள்ள ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் பிரதேச சாசனாரசக்க பலமண்டலய அமைப்புளின் அனுமதியுடன் பிரதேச செயலாளர்களுக்கு அபிவிருத்தியிற் குறைந்த அறநெறிப் பாடசாலை அபிவிருத்திப் பிரேரணைகள் 02 ஐச் சமர்ப்பிக்க வாய்ப்பு அளிக்கப்பட்டது. விஹாரை அறநெறிப் பாடசாலைகளைத் தெரிவுசெய்யும்போது சாசனாரசக்க பலமண்டலய அமைச்சின் அனுமதியுடன் தெரிவுசெய்யப்படும் அறநெறிப் பாடசாலை யோசனைகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படுகிறது.*

*அறநெறிப் பாடசாலை அபிவிருத்திப் பிரேரணைகளைத் தெரிவுசெய்யும்போது பின்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தப்படுகிறது:*

I. *காணி உரித்துடைய, பௌத்த அலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்துள்ள ஓர் அறநெறிப் பாடசாலையாக இருத்தல்.*
II. *கடந்த 02 ஆண்டு காலத்தில் வேறேதேனும் ஒரு மூலத்திலிருந்து உதவிகளைப் பெற்றிராதவையாக இருத்தல்.*
III. *கட்டிடத் தேவையொன்றின்போது அறநெறிப் பாடசாலைக் கட்டிடத்தில் அல்லது தர்மசாலையில் இடவசதி போதியதாக இல்லை என்பது மாணவர்களின் எண்ணிக்கைப்படி உறுதிசெய்யப்படல்.*
IV. *அறநெறிப் பாடசாலை கதிரைகள்/மேசைகள் மற்றும் பிற உபகரணங்கள் போதியனவாக இல்லாதிருத்தல்.*

V. அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு போதிய துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாதிருத்தல்.

இதன் அடிப்படையில், 2018 ஆம் ஆண்டில் அமைச்சிற்கு இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக கணிசமான எண்ணிக்கைகொண்ட அபிவிருத்திப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. அவற்றில் குழுவின் சிபார்சின் அடிப்படையில் 686 அபிவிருத்திப் பிரேரணைகளை அமுல்படுத்துவதற்கு அங்கீகாரமளித்து அமுல்படுத்துவதற்காக மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.




மளுவ ராஜமாலகாராமய விகாரையின் சுகத்த சாசனோதய அறநெறிப் பாடசாலைக் கட்டிட நிர்மாணம்

**2018.12.31 அன்றுள்ளவாறான பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம்**

| மாவட்டம் | அனுமதித்த நிதி ஒதுக்கீடு (ரூ.மி.) | அறநெறிப் பாடசாலை-களின் எண்ணிக்கை | கருத் திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்தி செய்த கருத் திட்டங்களின் எண்ணிக்கை | 2018.12.31 அன்று உள்ள வாறான செலவு (ரூ.மி.) | 2018.12.31 அன்று உள்ள வாறான கையிலுள்ள விலைப் பட்டிகள் (ரூ.மி. |
|---|---|---|---|---|---|---|
| காலி | 10.6 | 54 | 54 | 51 | 1029 | 0.58 |
| திருகோணமலை | 0.5 | 4 | 4 | 3 | 0.52 | |
| நுவரெலியா | 2.2 | 13 | 13 | 11 | 2.13 | |
| புத்தளம் | 5.07 | 29 | 29 | 29 | 4.76 | |
| பொலனறுவை | 2.18 | 12 | 12 | 11 | 2 | |
| பதுளை | 5.9 | 38 | 38 | 38 | 5.46 | |
| மட்டக்களப்பு | 0.3 | 2 | 2 | 2 | 0.3 | |
| கண்டி | 10.53 | 57 | 57 | 54 | 1072 | |
| மாத்தறை | 7.5 | 39 | 39 | 35 | 7.08 | |
| மாத்தளை | 4.9 | 26 | 26 | 26 | 4.49 | |
| மொணராகலை | 4.7 | 23 | 23 | 23 | 4.57 | |
| இரத்தினபுரி | 5.9 | 36 | 36 | 36 | 5.66 | 0.4 |
| வவுனியா | 1 | 5 | 5 | | 1 | |
| அம்பாந்தோட்டை | 3.3 | 21 | 21 | 20 | 3.93 | |
| அநுராதபுரம் | 10.1 | 53 | 53 | 49 | 9.73 | 1 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அம்பாறை | 3.5 | 19 | 19 | 17 | 3.46 | |
| களுத்துறை | 8.8 | 39 | 39 | 36 | 7.28 | 1.08 |
| கேகாலை | 6.4 | 38 | 38 | 28 | 5.11 | 0.96 |
| கொழும்பு | 5.7 | 32 | 32 | 30 | 5.39 | |
| கம்பஹா | 6 | 33 | 33 | 33 | 6.13 | |
| குருணாகல் | 34.41 | 156 | 156 | 156 | 33.48 | 0.83 |
| **முழு மொத்தம்** | **139.4** | **729** | **729** | **693** | **133.51** | **4.87** |

*2015-2018 ஆண்டுகளில் அறநெறிப் பாடசாலைகளின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட நிதிஒதுக்கீடுகளின் முன்னேற்றம் கீழ்வருமாறு:*

| ஆண்டு | மாவட்டங்கள் | நிதிஒதுக்கீடு (மி.ரூ.) | அறநெறிப் பாடசாலைகள் எண்ணிக்கை | செலவு (மி.ரூ.) |
|---|---|---|---|---|
| 2015 | 17 | 90.00 | 853 | 90.00 |
| 2016 | 19 | 90.00 | 678 | 97.82 |
| 2017 | 21 | 100.00 | 678 | 99.99 |
| 2018 | 21 | 140.00 | 693 | 133.51 |

(குறிப்பு 07)

*2018 ஆம் ஆண்டில் அபிவிருத்தியிற் குறைந்த அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு அரசாங்க வரவுசெலவுத்திட்டத்தின்மூலம் 140 மி.ரூ. நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்தது. அதன்படி, 2018.12.31 ஆந் திகதியளவில் 21 மாவட்டங்களில் பரந்துள்ள முன்னுரிமைப்படி அடையாளம் காணப்பட்ட 729 அறநெறிப் பாடசாலைகளுக்கு கட்டிடங்களையும் உபகரணங்களையும் வழங்குவதற்கு 133.51 மி.ரூ. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலை அபிவிருத்திப் பிரேரணைகளின் எண்ணிக்கை 693 ஆகும். எவ்வாறாயினும், முந்திய ஆண்டுடன் ஒப்பிடும்போது அபிவிருத்தியிற் குறைந்த அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்திசெய்வதற்கு ஒதுக்கப்பட்ட நிதிஒதுக்கீட்டின் அளவை 40% ஆல் அதிகரித்துக் கொள்ள முடிந்துள்ளது.*

## 2.2.4. அபிவிருத்தியிற் குறைந்த விஹாரைகளைப் புனரமைக்கும் நிகழ்ச்சித்திட்டம்

*2018 அபிவிருத்தியிற் குறைந்த விஹாரைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தையும் மூன்றாண்டு காலத் திட்டமாக அமுல்படுத்த அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.*

*2018 ஆம் ஆண்டில் பிரதேச சாசனாரக்சக்க பலமண்டல அமைப்புகளின் அனுமதியின் பேரில் பொருத்தமான விஹாரைகளை அபிவிருத்திசெய்வதற்கான 02 பிரேரணைகளை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்தும் பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்டது. ஆண்டிற்குரிய நிதிஒதுக்கீட்டு அளவு, ஆண்டில் நடைபெறும் அரச வெசாக் வைபவத்திற்கான செலவுகள், அபிவிருத்தித் தேவையின் தன்மை, பிரதேசத்திற்கு வழங்கும் சாசன ரீதியான பங்களிப்பு என்பவற்றையும் கருத்திற்கொண்டு மேற்படி குழுவினால் பின்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் அபிவிருத்திப் பிரேரணைகள் தெரிவு செய்யப்படுகின்றன.*

இப்பிரேரணைகள், அமைச்சின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய ஒரு குழுவினால் பின்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் தெரிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது:





i. காணி உரித்துடைய, பௌத்த அலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்துகொண்டுள்ள ஒரு விஹாரை அல்லது தசசில் மாத்தாக்களின் ஆச்சிரமம்.
ii. கடந்த 02 ஆண்டு காலத்தில் வேறேதேனும் மூலங்களிலிருந்து உதவிகளைப் பெற்றிராதவையாக இருத்தல்.
iii. நீர் வசதி, மின்சாரம், போதிய மலசலகூட வசதிகள் இன்றியவையாக இருத்தல்.
iv. விஹாரையில் இருக்கும் பிக்குமாருக்கு/சதசில் மாத்தாக்களுக்கு இடவசதி போதாமல் இருத்தலும் தற்போதுள்ள கட்டிடங்கள் தற்காலிக அல்லது ஓரளவு நிரந்தரமான நிலையில் இருத்தலும்.
v. போதிய அளவான ஒரு தான மண்டபம் இன்றிய நிலையில் இருத்தல்.

இதன்படி, 2018 ஆம் ஆண்டில் 21 மாவட்டங்களில் அமைந்துள்ள 574 விஹாரைகளுக்கு 220.7 மி.ரூ. நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 2018.12.31 ஆந் திகதி அளவில் மாவட்ட மட்டத்தில் நிதிஒதுக்கீடுகள் விடுவிக்கப்பட்டவற்றின் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்ற நிலையை குறிப்பு (7) இல் காணலாம். 2018.12.31 ஆந் திகதியில் உள்ளவாறு 574 விஹாரை அபிவிருத்திப் பிரேரணைகளுக்காக 220.6 மி.ரூ. நிதிஒதுக்கீட்டை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், 2017 ஆம் ஆண்டில் மாவட்ட செயலாளர்களினால் செலுத்தித் தீர்க்கப்படாத நிலுவையாகவுள்ள விலைப்பட்டிகளைச் செலுத்தித் தீர்ப்பதற்காக முன்வைக்கப்பட்ட கோரிக்கையின்படி 9.35 மி.ரூ. தொகையும் இயற்கை அனர்த்தங்களினால் சேதமடைந்த விஹாரைகளைக் கட்டியெழுப்புவதற்காக 41.12 மி.ரூ. தொகையும் ஒதுக்கப்பட்டது.

**அபிவிருத்தியிற் குறைந்த விஹாரைகளை அபிவிருத்திசெய்யும் நிகழ்ச்சித்திட்டம் - 2018.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம்**

| மாவட்டம் | அனுமதித்த நிதி ஒதுக்கீடு (ரூ.மி.) | விஹாரைகளின் எண்ணிக்கை | முழு மொத்தம் | 2018.12.31 அன்று உள்ளவாறான செலவு (ரூ.மி.) | 2018.12.31 அன்று உள்ளவாறான கையிலுள்ள விலைப் பட்டிகள் (ரூ.மி.) |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 8.53 | 18 | 18 | 8.12 | - |
| கம்பஹா | 5.32 | 14 | 13 | 5.27 | |
| களுத்துறை | 7.36 | 23 | 23 | 4.55 | 2.86 |
| கண்டி | 9.53 | 27 | 27 | 9.78 | - |
| மாத்தளை | 4.27 | 17 | 17 | 4.26 | - |
| நுவரெலியா | 2.8 | 10 | 10 | 2.78 | - |
| காலி | 12.82021 | 25 | 25 | 11.63 | 0.97 |
| மாத்தறை | 20.27 | 20 | 20 | 18.94 | - |
| அம்பாந்தோட்டை | 3.91 | 14 | 14 | 4.34 | 0.49 |
| வவுனியா | 0.6 | 2 | 2 | 0.6 | - |
| மட்டக்களப்பு | 1.2 | 4 | 4 | 1.2 | - |
| அம்பாறை | 3.11 | 12 | 12 | 2.96 | - |
| திருகோணமலை | 2.1 | 7 | 7 | 2.1 | - |
| புத்தளம் | 3.34 | 12 | 11 | 3 | - |
| அநுராதபுரம் | 9.01 | 32 | 32 | 7.02 | 1.74 |
| பொலனறுவை | 3.2 | 11 | 11 | 3.79 | 0.24 |
| பதுளை | 5.03 | 18 | 18 | 4.91 | - |
| மொணராகலை | 3.49 | 12 | 12 | 3.47 | - |
| இரத்தினபுரி | 32.3 | 27 | 27 | 28.63 | 1.56 |
| கேகாலை | 13.03 | 35 | 35 | 10.37 | 2.08 |
| குருணாகல் | 69.49 | 236 | 236 | 60.35 | 8.36 |
| **முழு மொத்தம்** | **220.69** | **576** | **574** | **198.07** | **18.32** |

**2015 - 2018 ஆம் ஆண்டு வரையில் அபிவிருத்தியிற் குறைந்த விஹாரைகளை அபிவிருத்திசெய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்**

| ஆண்டு | மாவட்டங்களின் எண்ணிக்கை | நிதிஒதுக்கீடு (ரூ.மி.) | விஹாரைகளின் எண்ணிக்கை | செலவு (மி.ரூ.) (2018.12.31 இல் உள்ளவாறு) |
|---|---|---|---|---|
| 2015 | 18 | 52.06 | 240 | 52.06 |
| 2016 | 23 | 122.56 | 488 | 122.56 |
| 2017 | 21 | 100.00 | 434 | 105.48 |
| 2018 | 21 | 220.69 | 574 | 198.07 |

(குறிப்பு 09)

## 2.2.5 பேண்தகு புண்ணிய கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டம்









''வறுமைநிலையிலிருந்தும் கடன் சுமையிலிருந்தும் மீண்டு போசனை மிகு, ஆரோக்கியம் மிகு, போதையிலிருந்தும் சுயநினைவுடன் வாழ்வைக் கழிக்கும் சகல விதமான இம்சைகளிலிருந்தும் மீண்ட, ஆன்மீக ரீதியாக உயர்ந்த மனத்தைக்கொண்ட, நல்லொழுக்கமும் முன்னேறிய ஆளுமையும் பூண்ட மனிதவளத்தைக் கொண்ட ஒரு கிராமத்தை'' புண்ணிய கிராமம் என்றழைக்கலாம். பௌத்த மதத்தை போசித்துக் காப்பதற்கு அன்று நிலவிய ''கிராமமும் பன்சாலையும்'' என்ற எண்ணக்கருவை கிராமிய சமூகத்தவர் மத்தியில் வேரூன்றச் செய்வதன் ஊடாக சிறந்த பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அவசியமாகின்ற பௌத்த மத போதனைகளிலும் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அவசியமாகின்ற ஊக்குவிப்புகளை வழங்குவதும் ஊடாக வளங்களை நுகரும்போது சமத்துவத்தை ஏற்படுத்துவதும் அதன் ஊடாக தனிநபர், குடும்பம், கிராமம் என்பவற்றைக் காப்பதும் பேண்தகு புண்ணிய கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். இதற்காக விஹாரைகளை மையமாகக்கொண்ட, ஒழுக்க பண்பாடுகளைப் பேணும் ஆன்மிக விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் பௌதிக மற்றும் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றன. சிறந்த, நல்லொழுக்கம் நிறைந்த, பொருளாதார ரீதியில் பலமடைந்த ஒரு கிராமத்தைத் தோற்றுவிப்பதற்கு வசதியிற் குறைந்த கஷ்டப்பற விஹாரைகளையும் மேற்சொன்ன கிராமங்களையும் அபிவிருத்திசெய்து, கிராமங்களைச் சேர்ந்த மக்களை கிராமத்து பன்சாலையுடன் ஒழுங்கிணைத்து ஒழுக்க விழுமியங்கள் பூண்ட ஒரு சமூகத்தைத் தோற்றுவிப்பதற்கு புத்தசாசன அமைச்சினால் 2018 ஆம் ஆண்டில் பேண்தகு புண்ணிய கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டது.

- பேண்தகு புண்ணிய கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் அமுல்படுத்தப்படவுள்ள நிகழ்ச்சித்திட்டங்களும் அவற்றின் நோக்கங்களும்.

1. ஒழுக்கநெறிகளைப் பேணிப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டம்

   - புத்த தருமத்தை அடிப்படையாகக்கொண்ட சமூக ஒழுக்கநெறிகளைப் பாதுகாக்கும் பொருட்டு உதவி ஆரோக்கியமானதும் பொருளாதார ரீதியில் ஸ்திரப்பாடானதுமான மக்களை உருவாக்குதல்.

   - மோசமான சமூக விரோத செயல்கள் சமூகமயமாகும் போக்கைக் குறைப்பதற்கு உதவுதல்.

   - பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் சிறந்த ஒரு இடைத்தொடர்பு கட்டியெழுப்பப்படுவதற்கு முனைப்பான பாத்தியதையுடையவராகச் செயலாற்றுதல்.

   - நாளாந்த சமூக செயற்பாடுகளில் விஹாரைகளதும் பிக்குமாரதும் பங்கேற்பை சிறந்த மட்டத்திற்குக் கொண்டுவருவதற்கு உதவுதல்.

- மத செயற்பாடுகளுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிராத பரந்த சமூக செயற்பாடுகளுக்கு பிக்குமாரின் முனைப்பான தலைமைத்துவத்தை வழங்கும் பொருட்டு ஒரு வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தல்.

2. விஹாரைகளை மையமாகக்கொண்ட பௌதிக மற்றும் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

   - விஹாரைகளை மையமாகக்கொண்டு அபிவிருத்திசெய்யக்கூடிய கிராமியப் பொருளாதார முறையொன்றைக் கட்டியெழுப்புவதற்கு உதவுதல்.

   - பெண்கள் வெளிநாடு செல்லல், சிறுவர் உழைப்பு போன்ற சமூக பின்னடைவுக்குக் காரணமாக அமையக்கூடிய பொருளாதார செயற்பாடுகளை விட்டொழித்து, கிராமியப் பொருளாதாரத்தைப் பயனுறுதிவாய்ந்த விதத்தில் வழிநடத்தும் பொருளாதார உபாயமுறைகளை வகுப்பதற்கு அவசியமான தலைமைத்துவத்தை விஹாரைகளின் ஊடாக வழங்கும் பொருட்டு தகுந்த ஒரு செயன்முறையை அறிமுகப்படுத்தல்.

   - விஹாரையில் கிராமிய மக்களுக்கு பயனடையும் பொருட்டு பொதுக் கட்டிடமொன்றை அபிவிருத்திசெய்தல்.

   - பொருளாதார நோக்கங்களில் உதவுவதற்கு பயன்படுத்திக்கொண்டு, இயன்றவாறு விஹாரையை மையமாகக்கொண்ட கிராமிய தரவு முறைமையொன்றைப் பேணிவருதல்.

இந்நிகழ்சித்திட்டத்திற்கு 2018 வரவுசெலவுத்திட்டம் மூலம் 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், முந்திய ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் வயதியிற் குறைந்த பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஆகக்குறைந்த சமூக, பொருளாதார பின்புலன்களை அறிக்கையிடும் 02 கிராமங்கள் வீதம் அடையாளம் கண்டு, அக்கிராமங்களை சமூக ஒழுக்கநெறிகளுடன் பொருளாதார ரீதியாக பலம்பொருந்திய ஒரு சமூகம் வாழும் புண்ணிய கிராமமொன்றாக மாற்றுவதற்கு அவசியமான கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டது.

அதன்படி, அவ்வக் கிராமங்களிலுள்ள சமூக, பொருளாதார சூழலுக்கு முக்கிய தடையாக அமையக்கூடிய பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கக்கூடிய விதத்தில் கருத்திட்டங்களைத் திட்டமிடும் பொறுப்பும் பயிற்சியும் கிராமியக் குழுவிடமும் பிரதேச குழுவிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன்படி, அடையாளம் காணப்பட்ட கிராமங்களில் போதையூட்டும் ஔடதங்களையும் சமூக விரோத செயற்பாடுகளையும் சிறுவர் மற்றும் மகளிர் துன்புறுத்தலையும் ஒழித்துக்கட்டி, பயிற்சி மற்றும் ஆன்மிக அபிவிருத்திக் கருத்திட்டங்களையும் சமூகத்தின் இயல்பு வாழ்வைப் பலப்படுத்துவதற்கு உதவக்கூடிய, பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களையும் மையமாகக்கொண்ட விஹாரைகளுக்கு பௌதிக அபிவிருத்திப் பிரேரணைகளும் அமுல்படுத்தப்பட்டன. அதன்படி, 2018.12.31 ஆந் திகதி அளவில் 22 மாவட்டங்களிலிருந்து 53 கிராமங்களுக்கு 53 பௌதிக அபிவிருத்திப்

பிரேரணைகளையும் 87 ஒழுக்கநெறி மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பிரேரணைகளையும் அமுல்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டது.

2018 ஆம் ஆண்டில் பேண்தகு புண்ணிய கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்துக்கு மாவட்ட மட்டத்தில் பின்வருமாறு நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது:

**பேண்தகு புண்ணிய கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டம் - 2018**
**2018.10.12 ஆந் திகதியில் உள்ளவாறான பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம்**

| தொ. இல. | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | கிராமங்கள் எண்ணிக்கை | ஆன்மீக மற்றும் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் எண்ணிக்கை | பௌதிக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் எண்ணிக்கை | மொத்த நிதி ஒதுக்கீட்டு அளவு (ரூ.) | செலவு (ரூ) | 2018.12.31 அன்று உள்ளவாறு கையிலுள்ள பட்டியல்கள் (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | 4 | 4 | 36 | 6 | 2,356,000.00 | 2,058,190.41 | - |
| 2 | கம்பஹா | 5 | 5 | 82 | 7 | 1,855,085.00 | 1,764,138.75 | - |
| 3 | களுத்துறை | 4 | 4 | 42 | 7 | 2,358,750.00 | 2,293709.27 | - |
| 4 | கண்டி | 4 | 4 | 59 | 6 | 1,712,150.00 | 1,710,219.00 | - |
| 5 | மாத்தளை | 4 | 4 | 69 | 4 | 1,658,700.00 | 1,568,682.41 | - |
| 6 | நுவரெலியா | 4 | 4 | 64 | 6 | 1,582,000.00 | 1,540,850.23 | - |
| 7 | காலி | 4 | 4 | 54 | 7 | 1,930,200.00 | 1,593,596.41 | 222,792.91 |
| 8 | மாத்தறை | 4 | 4 | 39 | 6 | 1,421,000.00 | 1,389,166.00 | - |
| 9 | அம்பாந்தோட்டை | 4 | 4 | 46 | 6 | 2,592,000.00 | 2,466,639.24 | - |
| 10 | மன்னார் | 3 | 3 | 22 | 1 | 560,000.00 | 560,000.00 | - |
| 11 | வவுனியா | 1 | 4 | 18 | 6 | 2,697,470.05 | 1,175,400.00 | - |
| 12 | முல்லைத்தீவு | 1 | 4 | 29 | 6 | 2,068,833.01 | 2,011,333.01 | - |
| 13 | அம்பாறை | 4 | 4 | 56 | 6 | 1,577,375.00 | 1,496,341.00 | - |
| 14 | திருகோணமலை | 3 | 3 | 22 | 4 | 862,750.00 | 862இ320.00 | - |
| 15 | குருணாகல் | 7 | 7 | 63 | 14 | 5,730,340.00 | 5,202,692.15 | 400,000.00 |
| 16 | புத்தளம் | 4 | 4 | 73 | 6 | 1,785,000.00 | 1,775,000.00 | - |
| 17 | அநுராதபுரம் | 4 | 4 | 36 | 7 | 2,456,125.00 | 1,236,263.50 | 1,100,000.00 |
| 18 | பொலனறுவை | 4 | 4 | 72 | 6 | 2,255,882.50 | 1,651,424.52 | 600,000.00 |
| 19 | பதுளை | 4 | 4 | 39 | 6 | 1,600,700.00 | 1,472,867.98 | - |
| 20 | மொணராகலை | 4 | 4 | 42 | 6 | 2,040,200.00 | 1,981,549.46 | - |
| 21 | இரத்தினபுரி | 4 | 4 | 51 | 6 | 1,700,886.80 | 1,487,170.03 | - |
| 22 | கேகாலை | 4 | 4 | 46 | 6 | 1,502,110.00 | 1,408,404.90 | - |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 23 | புனித பகுதிகள் - மொரவெவ கிரி கஜபா கல்லென் ரஜமகா விகாரை நீர்க் கருத்திட்டம் | | | | 1 | | | - |
| | **மொத்தம்** | **84** | **90** | **1060** | **136** | **44,303,557.49** | **38,705,958.27** | **2,322,792.91** |
| | **அறநெறிப் பாடசாலை நூல் தொகுதிகளுக்கு** | | | | | **958251.00** | | |
| | **மொத்தம்** | | | | | **45,261,808.49** | **40,003,423.45** | |

(குறிப்பு 09)

அதன்படி, நாடுபூராவும் 22 மாவட்டங்களின் 84 பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ள 90 கிராமங்களில் 1060 ஆன்மீக மற்றும் பொருளாதார நிகழ்ச்சித்திட்டங்களும் 136 பௌதிக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பிரேரணைகளும் அமுல்படுத்தப்பட்டன.

அதற்கு 47.06 மி.ரூ. நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், அது மொத்த நிதிஒதுக்கீட்டில் 94% சதவீதமாகும். 2018.12.31 அன்றுள்ளவாறான செலவு 40.0 மி.ரூ. ஆகும்.

மேலும், இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பூர்வாங்க நிகழ்ச்சித்திட்டங்கள் அமைச்சின் உத்தியோகத்தர்களின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் மொணராகலை, மாத்தறை, கொழும்பு, மாத்தளை, அநுராதபுரம், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக்கிராமங்களின் சமூக, பொருளாதார பின்புலங்கள் பற்றிய தரவுகள் திரட்டப்பட்டதுடன், அத்தகைய தரவுகளின் அடிப்படையில் முன்னேற்ற மற்றும் கண்காணிப்பு அறிக்கைகளை 03 ஆண்டுகளில் தொடர்ச்சியாக முன்னெடுத்துச்செல்வதற்கும், எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் அக்கிராமங்களில் சிறந்த சமூக செயற்பாடுகளின் முன்னேற்றம் ஆராயப்படவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பேண்தகு புண்ணிய கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் 2016 – 2018 வரையான முன்னேற்றம்**

| ஆண்டு | மாவட்டங்களின் எண்ணிக்கை | நிதிஒதுக்கீடு (ரூ.மி.) | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | செலவு (மி.ரூ.) (2018.12.31 அன்றுள்ளவாறு) |
|---|---|---|---|---|
| 2016 | 05 | 24.00 | 15 | 22.08 |
| 2017 | 21 | 24.00 | 78 | 18.20 |
| 2018 | 22 | 50.00 | 1196 | 40.00 |

(குறிப்பு 11)

## 2.2.6 புராதன விஹாரைகளின் மீட்டளிப்பு மற்றும் புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

*2018 வரவுசெலவுத்திட்ட பிரேரணைகளை அமுல்படுத்தலின்கீழ் பொதுத் திறைசேரியினால் வரவுசெலவுத்திட்ட பிரேரணை இல. 161 மூலம் தொல்லியல் பெறுமானம்கொண்ட புராதன ரஜமகா விஹாரைகளையும் வழிபாட்டுத்தலங்களையும் மீட்டளிப்பதற்கும் புனரமைப்பதற்கும் 250 மி.ரூ. நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்தது. இப்பிரேரணையின்கீழ் புத்தசாசன அமைச்சிற்கு 175 மி.ரூ. நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டது. தொல்பொருளியல் திணைக்களம், பௌதிக திட்டமிடல் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்களுடனான கலந்தாலோசனையுடன் எடுக்கப்பட்ட தீர்மானப்படி இந்நிகழ்ச்சித்திட்டத்தை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் பெற்றுக்கொள்யப்படும் அபிவிருத்திப் பிரேரணைகள் மூலம் அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டது. தொல்பொருளியல் திணைக்களத்தின் சிபார்சின் பேரில் பெற்றுக்கொள்ளப்படும் குறித்த அபிவிருத்திப் பணிகளின் கண்காணிப்பும் வழிகாட்டலும் அத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.*







*2018ஆம் ஆண்டில் மேற்படி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளின் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம் பின்வரும் குறிப்பின்மூலம் காட்டப்பட்டுள்ளது:*

### புராதன விஹாரைகளை மீட்டளித்தல் மற்றும் புனரமைத்தல் நிகழ்ச்சித்திட்டம் - 2018.12.31 அன்றுள்ளவாறான பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம்

| மாவட்டம் | அனுமதித்த நிதி ஒதுக்கீடு (மி.ரூ.) | விஹாரைகளின் எண்ணிக்கை | முழு மொத்தம் | 2018.12.31 அன்று உள்ளவாறான செலவு (ரூ.மி.) | 2018.12.31 அன்று உள்ளவாறான கையிலுள்ள விலைப்பட்டிகள் (ரூ.மி) |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 6 | 3 | 3 | 5.75 | - |
| கம்பஹா | 12.5 | 5 | 5 | 11.35 | |
| களுத்துறை | 6 | 3 | 3 | 4.85 | 1.09 |
| கண்டி | 8.3 | 7 | 7 | 7.3 | - |
| மாத்தளை | 9.3 | 5 | 5 | 8.56 | - |
| நுவரெலியா | 9.4 | 5 | 5 | 9.29 | - |
| காலி | 10.15 | 5 | 5 | 7.18 | 2.88 |
| மாத்தறை | 7.4 | 5 | 5 | 7.26 | - |
| அம்பாந்தோட்டை | 2.69 | 3 | 3 | 0.76 | 1.94 |
| வவுனியா | 6 | 3 | 3 | 6 | - |
| மட்டக்களப்பு | 2 | 1 | 1 | 2 | - |
| அம்பாறை | 5.2 | 6 | 6 | 4.9 | - |
| திருகோணமலை | 8 | 5 | 5 | 7.61 | - |
| புத்தளம் | 6 | 3 | 3 | 5.98 | - |
| அநுராதபுரம் | 16 | 6 | 6 | 6.5 | 7.94 |
| பொலனறுவை | 5.15 | 3 | 3 | 1.35 | 2.93 |
| பதுளை | 7.95 | 4 | 4 | 7.78 | - |
| மொணராகலை | 10 | 5 | 5 | 9.94 | - |
| இரத்தினபுரி | 4 | 2 | 2 | 0.03 | 3.95 |
| கேகாலை | 9.5 | 5 | 5 | 8.18 | - |
| யாழ்ப்பாணம் | 2 | 1 | 1 | | - |
| முல்லைத்தீவு | 6.28 | | 3 | 1.76 | 2.23 |
| மன்னார் | 0.5 | 3 | | 0.5 | |
| குருணாகல் | 9.5 | 6 | 6 | 5.96 | 3.39 |
| இலங்கை இராணுவம் | | | | 10.46 | |
| **முழு மொத்தம்** | **169.82** | **94** | **91** | **141.25** | **26.35** |

(குறிப்பு 13)

# 2.2.7. மத சகவாழ்வு நிகழ்ச்சித்திட்டமும் பிற மொழிகள் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டமும்

## *2.2.7.1. மத சகவாழ்வு நிகழ்ச்சித்திட்டம்*

### அறிமுகம்

எல்லா மதங்களின் ஊடாகவும் ஒரு நாட்டின் ஒழுக்க பண்பாட்டு விருத்திக்கு பெரும் பணி ஆற்றப்படுகிறது. மதக் கோட்பாடுகளின் ஊடாக ஒரு நாட்டு மக்களின் லௌகீக விருத்தியையும் ஆன்மீக விருத்தியையும் அடைந்துகொள்ள முடியும். இலங்கை பல மதங்களைப் பின்பற்றும், பல இனப்பிரிவுகள் இணைந்து வாழும் ஒரு நாடு என்ற ரீதியில் தனது தனித்துவ அடையாளத்தைக் காத்து, பேதம் எதுவுமின்றி ஒன்றாக எழுந்து நிற்பது நாட்டின் எதிர்கால அபிவிருத்திச் செயன்முறைக்கு மிகவும் முக்கியமானதாகும். பிரிவினைக்குப் பதிலாக ஒன்றிணைதல், ஒருவரை ஒருவர் மதித்தல், ஒருவரை ஒருவர் சகித்தல் என்பன மதங்கள் மூலம் போதிக்கப்படுகிறது. இதற்கு மத அடிப்படையை முன்வைத்து எல்லா மதங்களும் பற்றிய புரிந்துணர்வொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். எல்லா மதக் கோட்பாடுகளையும் அறிந்துகொள்வது மனிதர்கள் மத்தியில் நல்லெண்ணங்கள் துளிர்விடத் தூண்டுகோலாக அமையும். அது, சொல்லும் செயலும் சிறந்த, நன்னடத்தையுள்ள ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு உறுதுணையாகும். அதற்காக எல்லாத மதங்களதும் உள்ளார்த்த அம்சங்களும் கலாசாரக் கூறுகளும் பற்றிய சரியான புரிந்துணர்வொன்றைப் பெற்றுக்கொள்வது இனங்களுக்கிடையில் சகவாழ்வு வளர்வதற்கும் மோதல்கள் தணிவதற்கும் காரணமாக அமையும். புரிந்துணர்வின்மையை ஒழித்துவிடும். அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் பங்கேற்புடன் எல்லா மதங்களும் பற்றிய மெய் விளக்கமொன்றைப் பெற்றுக்கொடுப்பதை நோக்காகக் கொண்டு புத்தசாசன அமைச்சினால் மத சகவாழ்வு நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அது, தேசிய மற்றும் மத நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கு உறுதுணையாக அமையும்.

### நோக்கங்கள்

எல்லா மதங்களும் பற்றிய பரஸ்பர புரிந்துணர்வை முன்னேற்றுதலும் புரிந்துணர்வின்மை காரணமாக ஏற்படக்கூடிய பிரச்சினைகளை நிவர்த்திசெய்வதன் ஊடாக மத நல்லிணக்கத்தை ஊக்குவித்தலும்.





**➢ இலக்குக் குழுக்கள்**

எல்லா மதங்களின் அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளும் ஆசிரியர்களும் பெற்றோர்களும்.

**➢ மத சகவாழ்வு நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகளும் அமுலிலுள்ள முறைமைகளும்**

- வணக்கத்திற்குரிய தேரர்கள் உள்ளிட்ட தலைவர்கள், சிறப்பு அதிதிகள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொள்ளும் வைபவமொன்றை ஒழுங்குசெய்தல்.
- ஒவ்வொருவரையும் அடையாளம் கண்டு பிள்ளைகளுக்கு பிள்ளைகளும் பெற்றோர்களுக்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் என்றவாறு அறிமுகப்படுத்தி, அந்தந்த மத கலாசார ஆசாரங்கள், பழக்கவழக்கங்கள், பரஸ்பர கௌரவம் என்பன பேணப்படக்கூடிய விதத்தில் அறிமுகமாதல்.
- மத வழிபாடுகளில் ஈடுபடுதல், மதத்தலங்களை (ஒரு விகாரை, ஓர் இந்துக் கோயில், ஒரு முஸ்லிம் பள்ளிவாசல், ஒரு கிறிஸ்தவ தேவாலயம்) பார்வையிடுதல்.
- கலாசாரப் பெறுமானமுள்ள விளையாட்டுக்கள்.
- பரஸ்பரம் உறவைக் கட்டியெழுப்புவதற்கான கருத்துக்களையும் மத அறிவையும் பரிமாறிக்கொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.

2018 ஆம் ஆண்டில் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

| மாவட்டம் | அமுல்படுத்திய இடம் | பயனாளிகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டுக் கிரயம் |
|---|---|---|---|
| களுத்துறை | பஸ்துன் ரட்ட தேசிய கல்வியியற் கல்லூரி | 320 | 2,400,000.00 |
| கம்பஹா | வேயாங்கொடை சியனே தேசிய கல்வியியற் கல்லூரி | 320 | |

(குறிப்பு 14)

2018.12.31 அன்றுள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம் குறிப்பு 1 இன் 7 மூலம் காட்டப்பட்டுள்ளது.

## 2.2.7.1. பிற மொழிகள் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்

➢ அறிமுகம்

புத்த தருமத்தின் நிலைபேற்றுக்கும் இருப்புக்கும் இன்றைய சமூகத்தின் பல்வேறு மொழிகள் பற்றிய பிக்குமாரின் அறிவு, அனுபவம், நடைமுறைப் பிரயோகம் என்பன மிகவும் முக்கியமானவையாகும். அதன்படி இந்நாட்டில் வாழும் பௌத்த, இந்து மற்றும் உலகில் பௌத்த தருமம் நிலைபெற்றுள்ள நாடுகளின் மக்களுக்கு தர்ம ஞானத்தைப் பரப்பீடு

செய்வதற்காக தமிழ், ஆங்கிலம், பாலி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளைக் கற்பிப்பதற்கும் பிக்குமாருக்குள்ள மொழியறிவைப் பரப்பீடுசெய்வதற்கும் இந்நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

➢ நோக்கங்கள்

பிக்குமாருக்கு தர்ம பிரசார நடவடிக்கைகளுக்கான மொழி ஆற்றல்களை விருத்திசெய்து கொள்ளலும் முறைப்படி மொழி அறிவைப் பெற்றுக்கொள்ளலும்.

➢ அமுல்படுத்தும் முறைமை

2018 ஆம் ஆண்டில் அநுராதபுரம் பிக்கு பல்கலைக்கழகம், களனிப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் மொழிக் கற்கைப் பிரிவுகளின் ஒத்தாசையைப் பெற்றுக்கொண்டு இந்நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. பல்வேறு மொழிகளுக்கு சான்றிதழ், டிப்ளோமா, உயர் டிப்ளோமா ஆகிய மட்டங்களில் அந்தந்த கல்வி நிறுவனங்கள் மூலம் மொழி ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் உள்நாட்டு, வெளிநாடு என்ற ரீதியில் தேரவாத பௌத்த தருமத்தைப் பிரசாரம்செய்வதற்கு மொழித் தேர்ச்சிபெற்ற பிக்குமார் குழாமொன்றை உருவாக்குவதற்கும் அவசியமான வேளைகளில் குறித்த பிக்குமாரின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. 2018 ஆம் ஆண்டிலும் இம்மொழி ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை விஸ்தரித்து சீன, யப்பானிய, கொரிய, தாய் மொழிக் கற்கைநெறிகள் வரை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. களனிப் பல்கலைக்கழகமும் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் மொழிக் கற்கைகள் பீடமும் மூலமும் பின்வரும் கற்கைநெறிகள் நடத்தப்படுகின்றன:

| நிறுவனம் | கற்கைநெறி | பயனாளிகள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட நிதிஒதுக்கீடு (ரூ) | வேறு விடயங்கள் |
|---|---|---|---|---|
| இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் | ஆங்கிலமொழி டிப்ளோமா - படிநிலை I | 1 | 20,000.00 | கற்கைநெறி நிறைவு பெற்றுள்ளது. |
| | ஆங்கிலமொழி டிப்ளோமா - படிநிலை II | 1 | 25,000.00 | கற்கைநெறி நிறைவு பெற்றுள்ளது. |
| கொழும்புப் பல்கலைக்கழகம் | ஆங்கிலமொழி சான்றிதழ் கற்கைநெறி | 30 | 900,000.00 | கற்கைநெறி நிறைவு பெற்றுள்ளது. |
| கொழும்புப் பல்கலைக்- கழகம் | சீனமொழி சான்றிதழ் கற்கைநெறி – படிநிலை II | 30 | 600,000.00 | கற்கைநெறி நிறைவு பெற்றுள்ளது. |
| இலங்கை பிக்கு பல்கலைக்- கழகம் | ஆங்கிலமொழி டிப்ளோமா கற்கைநெறி | 38 | 684,000.00 | கற்கைநெறி நிறைவு பெற்றுள்ளது. |
| களனிப் பல்கலைக்கழகம் | கொரிய மொழி சான்றிதழ் கற்கைநெறி – படிநிலை II | | 20,000.00 | கற்கைநெறி நிறைவு பெற்றுள்ளது. |
| **மொத்தம்** | | **100** | **2,229,000.00** | |

(குறிப்பு 15)

2018.12.31 அன்றுள்ளவாறான இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம் குறிப்பு 1 இன் 7 மூலம் காட்டப்பட்டுள்ளது.

### 2.2.8. நேபாளத்தில் ஏற்பட்ட புவியதிர்வினால் சேதமடைந்த புனிதத்தலங்களைப் புனரமைத்தல்

நேபாளத்தில் ஏற்பட்ட புவியதிர்வினால் அந்நாட்டின் ஏராளமான புனிதத்தலங்கள் சேதமடைந்ததுடன், இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையில் நிலவும் நீண்டகால இராஜதந்திர மற்றும் வரலாற்று ரீதியான தொடர்பும் புவியதிர்வினால் ஏற்பட்ட பாரிய சேதங்களையும் கவனத்திலெடுத்து மேற்படி புனிதத்தலங்களில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ இலங்கை அரசாங்கத்தின் தலையீட்டுடன் புனரமைப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டது.

அதன்படி, நேபாளத்திலுள்ள சேதமடைந்த பௌத்த புனிதத்தலம் ஒன்றையும் இந்துக் கோயில் ஒன்றையும் புனரமைக்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்தது. அந்நாட்டிலுள்ள பௌத்த விஹாரைகளில் சேதமடைந்த சுவாயம்புனாத் ஆனந்தகுட்டி பௌத்த விஹாரையும் லில்லிட்பூர் ராத்தோ மச்சிந்திரநாத் இந்துக் கோயிலும் அவ்வாறு புனரமைப்பதற்காகத் தெரிவுசெய்யப்பட்டது. இது குறித்து அந்நாட்டு அதிகாரிகளின் இணக்கப்பாட்டுடன் 2015 யூன் 25 ஆந் திகதி புவியதிர்வினால் சேதமடைந்த நேபாளத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான சர்வதேச உதவி வழங்கும் மாநாட்டிற்கு இலங்கையின் பங்களிப்பு பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.





நேபாளம் இலங்கைத் தூதுவரினால் சமர்ப்பிக்கப்பட்ட செலவின மதிப்பீட்டின்படி சுவாயம்புனாத் ஆனந்தகுட்டி பௌத்த விஹாரையைப் புனரமைப்பதற்கு 203,617,620.00 நேபாள ரூபா (இலங்கை நாணய மதிப்புப்படி 277 மி.ரூ.) தொகையும் ராத்தோ மச்சிந்திரநாத் இந்துக் கோயிலைப் புனரமைப்பதற்கு 50,000,000.00 நேபாள ரூபா (இலங்கை நாணய மதிப்புப்படி 68 மி.ரூ.) தொகையும் செலவிட ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்தது.

2017.12.31 அன்றளவில் இக்கருத்திட்டத்திற்காக இலங்கை நாணய மதிப்புப்படி 245.0 மி.ரூ. தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. அன்றைய தினத்திற்கான திரண்ட கிரயம் 179.50 மி.ரூ. ஆகும்.

இக்கருத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆராயும் 12 ஆவது நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் கருத்திட்டத்தின் வேலைகளைப் பூர்த்திசெய்வதற்கு மேலும் சுமக்க நேரிடும்

மேலதிக கிரயமான 105.0 மி.ரூ. தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு 2018.04.11 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தது. அதன்படி, மொத்த கருத்திட்டக் கிரய மதிப்பீடு 450.0 மி.ரூ. எனத் திருத்தப்பட்டது.

2018.12.31 அன்றுள்ளவாறான இக்கருத்திட்டத்தின் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம் குறிப்பு 16 இன்கீழ் காட்டப்பட்டுள்ளது.

| கருத்திட்டப் பெயர் | அபிவிருத்திப் பணி | பௌதிக முன்னேற்றம் | 2018.012.31 அன்று உள்ளவாறான திரண்ட நிதிஒதுக்கீடு (ரூ) | 2018.12.31 அன்று உள்ளவாறான திரண்ட செலவு (ரூ) |
|---|---|---|---|---|
| ஆனந்தகுட்டி விஹாரை | சங்காவாச - பகுதி I | 90% | 450,000,000.00 | 293,541,064.36 |
| | சங்காவாச - பகுதி II | | | |
| | தர்மசாலாவ | | | |
| | சீமா சாலாவ | | | |
| | ஸ்தூபய | | | |
| | தாது கோபுரம் | | | |
| | சீமா சாலாவ, ஸ்தூபம் இடையிலான பாதுகாப்பு அரண் | | | |
| | மேலதிக அபிவிருத்திப் பணிகள் | | | |
| ராத்தோ மச்சிந்திரநாத் இந்துக் கோயில் | | | | |
| **மொத்தம்** | | | **450,000,000.00** | **293,541,064.36** |

(குறிப்பு 16)

### 2.2.9 . பாரம்பரிய கண்டிய நடனத்தையும் கலாசார மரபுரிமைகளையும் பேணிப் பாதுகாப்பதற்கு ஶ்ரீ தலதா மாளிகையுடன் இணைக்கப்பட்ட அரங்காட்டுகை பயிற்சி நிறுவனமொன்றை பல்லேகெலே பகுதியில் ஆரம்பித்தல்

சுதேச பாரம்பரியக் கலை மரபுகளை நாளைய சந்ததிக்கு எடுத்துச்செல்லும் சவாலை வெற்றிகொள்ளும் நோக்குடன் இந்திய அரசாங்கத்தின் நிதிக் கொடைகளின் பேரில் முன்னெடுக்கப்படும் இக்கருத்திட்டத்திற்கான மொத்த கிரய மதிப்பீடு 145 மி.ரூ. ஆகும். இக்கருத்திட்டத்திற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையின் நிபந்தனைகளின்படி கருத்திட்ட வேலைகளின் பெறுமதியின் பேரில் மதிப்பிடப்பட்ட பெறுமதிசேர் வரித் தொகையைச் செலுத்துவதற்கு உள்ளூர் நிதியங்கள் (17) மூலம் 5 மி.ரூ. தொகையும் கருத்திட்ட முடிவு வேலைகளுக்காக 89 மி.ரூ. தொகையும் 2018 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

கருத்திட்டத்திற்குரிய நிதிஒதுக்கீட்டுப் பணிகள் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், கருத்திட்ட இந்நடவடிக்கைகளை மேற்பார்வைசெய்வதற்கு புத்தசாசனம் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சு, இந்திய உயர் ஸ்தானிகராலயம், தலதா மாளிகையின் வெளிநாட்டு வளத் திணைக்களப் பிரதிநிதிகளைக்கொண்ட நடவடிக்கைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.





2018.12.31. அன்றுள்ளவாறான கருத்திட்டத்தின் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம் பின்வரும் குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

| கருத்திட்டப் பெயர் | கருத் திட்ட காலம் | நிதிமூலம் | 2018 நிதி ஒதுக்கீடு (மி.ரூ.) | அத்தாட்சிப்படுத்திய செலவு (மி.ரூ.) | | கருத்திட்ட செயற்பாடுகள் | பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | கருத் திட்டம் | பெறுமதி சேர் வரி | | |
| ஸ்ரீ தலதா மாளிகையுடன் இணைக்கப்பட்ட கலாசார மரபுரிமைகள் பற்றிய பயிற்சி நிலையத்தை நிர்மாணித்தல். | 2016 - 2019 | இந்திய அரசாங்கம் | 89.0 | 43.28 | | பெறுகைக் கருமங்களை அமுல்படுத்தல், உடன்படிக்கை செய்தல், ஒப்பந்தமளிப்பு. | 100% |
| | | இலங்கை அரசாங்கம் | 5.0 | | 1.3 | வகுப்பறைக் கட்டிடங்களை நிர்மாணித்தல் | 75% |
| | | | | | | பல்நோக்கு கட்டிடங்களை நிர்மாணித்தல் | 50% |
| **முழு மொத்தம்** | | | | 43.28 | 1.3 | | |

(குறிப்பு 17)

கிடைத்துள்ளது. அதன்படி, புண்ணிய அறக்கட்டளையொன்றை உருவாக்குவதற்குத் தயாரிக்கப்பட்ட அறக்கட்டளைக்கு சட்டமா அதிபரின் சிபார்சு கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அறக்கட்டளைக்கு உரிய திருத்தங்களை மேற்கொண்டு அறக்கட்டளைக் கட்டளைச்சட்டத்தின் 114 ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## நேபாளத்தின் லும்பிணி நகரிலுள்ள 'ஸ்ரீ லங்கா மகா விஹாரை'யின் அபிவிருத்தி வேலைகள்

நேபாளத்தின் லும்பிணி நகரிலுள்ள ஸ்ரீ லங்கா மகா விஹாரை, இலங்கை அரசாங்கத்துக்குச் சொந்தமான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு புனித பகுதி என்பதுடன் 2015 இல் நேபாளத்தில் ஏற்பட்ட புவியதிர்வைத் தொடர்ந்து அது உரிய பராமரிப்பின்றி காணப்பட்டது. நேபாளத் தூதுவரினால் செய்யப்பட்ட ஒரு வேண்டுகோளின் பயனாக அதன் புனமைப்பு வேலைகள் முடுக்கிவிடப்பட்டன. அதன்படி, கூரையின் புனரமைப்பு வேலைகள் இலங்கைத் தூதுவரின் அதிகாரத்துவத்தின்கீழ் இக்கருத்திட்டத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை மகா விகாரைக் கூரைகளின் திருத்த வேலைகள் நேபாள் ஒப்சனல் கம்பனியுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தப்படி நிறைவேற்றப்பட்டுள்ள-போதும், அதன் கட்டுமானங்களின் பௌதிக முன்னேற்றத்தை உறுதிப்படுத்திக் கொள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவும் ஏனைய பௌதிக விடயங்கள் காரணமாகவும் இவ்விகாரையின் அபிவிருத்தி வேலைகளுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்படவேண்டிய குறித்துரைக்கப்பட்ட செலவுத் தலைப்பொன்று இன்மையாலும் அதற்கான நிதிஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு 2018.07.24 ஆந் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதனையடுத்து, பூர்த்தியடைந்த வேலைகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதுடன் எஞ்சிய அபிவிருத்தி வேலைகளுக்கு ஒப்பந்தம் செய்யப்படவுள்ளது.

## நேபாளத்திலுள்ள துட்டகைமுனு ஓய்வு விடுதி



லும்பிணி புனித பகுதியை வணங்கி வழிபடுவதற்குச் செல்லும் இலங்கை யாத்திரிகர்களின் பயன்பாட்டுக்காக நிர்மாணிக்கப்பட்ட 'துட்டகைமுனு ஓய்வு விடுதி' லும்பிணி அபிவிருத்தி அறக்கட்டளையினால் லும்பிணி அபிவிருத்தித் திட்டம் சார்பாக வழங்கப்பட்ட ஒரு காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதன் நிர்வாகமும் முகாமைத்துவத்துவமும் இடைக்கிடை பல்வேறு தரப்பினர்களுக்கும் கைமாறியதன் பிற்பாடு ஏற்பட்டிருந்த தோல்விநிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து 2012 ஆம் ஆண்டில் அதன் புனரமைப்பு வேலைகளுக்காக புத்தசாசன அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பேரில் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்விடுதி புனரமைக்கப்பட்ட பின் யாத்திரிகர்களுக்காக 2015.08.01 ஆந் திகதி மீண்டும் திறந்துவைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து இவ்விடுதி புத்தசாசன அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றின் பேரில் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனைத்தொடர்ந்து இதற்கு புத்தசாசன அமைச்சினால் நியமிக்கப்பட்ட உதவி முகாமையாளர் ஒருவரும் நியமித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

யாத்திரை மேற்கொள்ளும் இலங்கை மற்றும் வெளிநாட்டு யாத்திரிகர்களுக்கு அவசியமான தங்குமிட வசதிகளை வழங்குவதற்கும் வைபவங்கள் மற்றும் கலந்துரையாடல்களுக்கான வசதிகளை வழங்குவதற்கும் அவசியமான வசதிகள் இந்த ஓய்வு விடுதியில் உள்ளன.

நேபாளத்தின் துட்டகைமுனு ஓய்வுவிடுதிவின் நிர்வாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை முகாமைசெய்வதற்காக முகாமையாளருக்கு மேலதிகமாக உதவி முகாமையாளர் ஒருவர் செப்டம்பர் மாதம் தொடக்கம் நியமித்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

நேபாளத்திலுள்ள லும்பிணி ஓய்வு விடுதியின் 2018.01.01 ஆந் திகதி தொடக்கம் 2018.12.31 ஆந் திகதி வரையான வருமான மற்றும் செலவின நிலைமையும் தங்குவதற்கான அறைகள் ஒதுக்குதல் நிலைமையும் பற்றிய விபரம் கீழ் தரப்பட்டுள்ளது.

*       *சம்பளக் கொடுப்பனவு, மின்சார சிட்டைகள், தொலைபேசிச் சிட்டைகள், நீர்ச் சிட்டைக*

| **மாதம்** | **வருமானம் (இலங்கை ரூபா)** | *** செலவினம் (இலங்கை ரூபா)** |
|---|---|---|
| ஜனவரி | 410,878.00 | 299,110.50 |
| பெப்ரவரி | 672,776.00 | 446,449.90 |
| மார்ச் | 700,382.80 | 361,595.00 |
| ஏப்ரல் | 188,162.00 | 321,993.10 |
| மே | 52,585.00 | 339,146.60 |
| ஜூன் | 71,900.00 | 335,453.30 |
| ஜூலை | 612,040.00 | 519,045.80 |
| ஆகஸ்ட் | 968,220.00 | 572,352.51 |
| செப்டம்பர் | 1,039,276.00 | 476,761.00 |
| அக்டோபர் | 977,553.64 | 401,312.60 |
| நவம்பர் | 1,578,893.34 | 472,500.60 |
| டிசம்பர் | கிடைக்கப்பெறவில்லை | 472,500.60 |
| **மொத்தம்** | **6,661,238.82** | **5,018,221.51** |

(குறிப்பு *19*)

*ள், பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான செலவுகள் என்பன செலவினத்தில் அடங்கும்.*

நேபாளத்தின் துட்டகைமுனு ஓய்வு விடுதிக்கு நீர் வசதி பெற்றுக்கொள்வதற்கு குழாய் நீர்க் கிணற்றை அமைப்பதற்காக 2.35 மி.ரூ. தொகை புனித பகுதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் இங்கு தங்கியிருக்கும் யாத்திரிகர்களுக்கு அவசியமான குடிநீர் வசதிகளையும் துப்புரவேற்பாட்டு வசதிகளையும் முன்னேற்ற எதிர்பார்க்கப்படுகிறது.

## ❧ அநுராதபுரம் குருந்தன்குளத்திலுள்ள ரஜரட்ட சுற்றுலா விடுதி

அநுராதபுரம் குருந்தன்குளம் ரஜரட்ட சுற்றுலா விடுதி புத்தசாசன அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அரசதுறையில் பணியாற்றும் அதேபோல் அவ்வாறல்லாதவர்களுக்கும் அநுராதபுரம் நகருக்கு சுற்றுலா செல்லும்போது தங்குமிட வசதியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விடுமுறை விடுதியாகும். அநுராதபுரம் மிஹிந்தலை வீதியில் அமைந்துள்ள இவ்விடுமுறை விடுதியில் ஒரே தடவையில் சுமார் 30 பேருக்கு தங்குமிட வசதி அளிக்கக்கூடிய அறைகள், நீர், துப்புரவேற்பாட்டு வசதிகளைக் கொண்டதாகும். 2018 ஆம் ஆண்டில் குருந்தன்குளம் ரஜரட்ட சுற்றுலா விடுதியில் தங்குமிட வசதியளித்தல், வருமானம்-செலவினம் பற்றிய நிலைமைகள் கீழ்க்காணும் குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

**அநுராதபுரம் குருந்தன்குளம் ரஜரட்ட சுற்றுலா விடுதியில் 2018.01.01 - 2018.09.30 ஆந் திகதி வரையான வருமான-செலவின நிலைமையும் தங்குமிட வசதியளித்தலும்**

| மாதம் | வருமானம் (ரூ) | செலவினம் (ரூ) | பிற செலவுகள் (ரூ) |
|---|---|---|---|
| ஜனவரி | 35,500.00 | 17,655.42 | 20,339.99 |
| பெப்ரவரி | 51,500.00 | 12,156.62 | |
| மார்ச் | 45,700.00 | 14,946.22 | |
| ஏப்ரல் | 40,200.00 | 29,372.11 | |
| மே | 47,800.00 | 24,176.35 | |
| ஜூன் | 45,100.00 | 13,058.96 | 61,749.73 |
| ஜூலை | 56,500.00 | 15,410.52 | 10,650.00 |
| ஆகஸ்ட் | 148,600.00 | 25,698.50 | |
| செப்டம்பர் | 51,000.00 | 28,135.73 | 30,157.57 |
| அக்டோபர் | 32,000.00 | 11,945.40 | 8496.57 |
| நவம்பர் | 26,500.00 | 10,317.46 | |
| டிசம்பர் | 57,800.00 | 16,854.78 | |
| **மொத்தம்** | **627,500.00** | **219,728.07** | **1,31,393.47** |

(குறிப்பு 20)

* *நீர், மின்சார, தொலைபேசி சிட்டைகளுக்கான செலவுகளே இங்கு செலவுகளாகக் காட்டப்பட்டுள்ளன.*
* *பராமரிப்பும், சிற்றளவு பண்டக் கொள்வனவுகளும் பிற செலவுகள் என்பதன்கீழ் காட்டப்பட்டுள்ளன.*

# 3. பல்வேறு விசேட வைபவ அலுவல்கள்

## அரச வெசாக் வைபவம்

*2562 ஆவது ஸ்ரீ சம்புத்த ஆண்டாகிய 2018 ஆம் ஆண்டில் புத்த பகவானின் முத்திறத்து நிகழ்வுகளை (புது தெமகுல) நினைவுகூருமுகமாக அரச அனுசரணையுடன் நடத்தப்பட்ட அரச வெசாக் வைபவம் இம்முறையும் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் தலைமையில் குருணாகல் பிங்கிரிய தேவகிரி ரஜமகா விஹாரையை மையமாகக்கொண்டு நடைபெற்றது.*





*அரச வெசாக் வைபவத்தை ஒட்டியதாக அதிவிசேட கருமங்கள் பலவற்றை பௌத்த அலுவல்கள் திணைக்களம் சிரமேற்கொண்டது. 2018 ஏப்ரல் 26 ஆந் திகதியில் தொடங்கி ஒரு வார காலமாக 'வெசாக் வாரம்' எனப் பெயரிடப்பட்டு பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள், அரச நிறுவனங்கள் மற்றும் பௌத்த மத அமைப்புகளின் பங்கேற்புடன் நாடு பூராவும் சீலம் அனுஷ்டிக்கும் (சில் சமாதன்) நிகழ்ச்சிகள் உட்பட சாசன புத்தெழுச்சியை ஏற்படுத்தக்கூடியதும் பௌத்த மறுமலர்ச்சிக்கு வித்திடுவதுமான பல்வேறு மத நிகழ்ச்சிகளும் சமூக நல நிகழ்ச்சிகளும் திட்டமிட்டு அமுல்படுத்தப்பட்டன. இவ்வைபவத்தில் தெரிவுசெய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் அனுசரணையையும் பங்களிப்பையும் வழங்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.*

*இதற்கான புத்தசான அமைச்சின் பௌத்த விஹாரைகள் அபிவிருத்தியின் கீழ் குருணாகல் மாவட்டத்திலுள்ள 158 அறநெறிப் பாடசாலைகளுக்கு 25 மி.ரூ. வீதமும் 235 விஹாரைகளுக்கு 65.18 மி.ரூ. வீதமும் நிதி ஒதுக்கீட்டை வழங்கி விஹாரைகளின் பௌதிக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், புனித பகுதிகள் என்ற செலவுத் தலைப்பின்கீழ் அரச வெசாக் வைபவம் இடம்பெற்ற பிங்கிரிய*

ரஜமகா விஹாரையின் பௌதிக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி கருதி 46 மி.ரூ. தொகை செலவிடப்பட்டது.

## ஸ்ரீமான் அநகாரிக தர்மபால அவர்களின் 154 ஆவது ஜன்ம தின நினைவுப் பெருவிழா

புத்தசாசனத்தின் நிலைபேற்றுக்கும் இலங்கை மக்கட் சமூகத்தின் உயர்ச்சிக்கும் அரும் பணியாற்றிய ஸ்ரீமான் அநகாரிக தர்மபால அவர்களின் 154 ஆவது ஜன்ம தின நினைவுப் பெருவிழா 2018 செப்டம்பர் 17 ஆந் திகதி பி.ப. 03.00 மணிக்கு அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

முத்திறத்து பௌத்த மத சிந்தனைப் பிரிவுகளின் (த்ரை நிக்காய) மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட மகா சங்கத்தினர், அமைச்சர்கள், முப்படைத் தளபதிகள் உள்ளிட்ட படை அதிகாரிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஏனைய 1200 க்கும் மேற்பட்ட மாணவமணிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

தர்மபால சிந்தனையிலிருந்து சமூகத்திற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் அடங்கிய ஒரு சிறு நூலைத் தயாரித்து வருகைதந்திருந்தவர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, தர்மபால சரிதத்தையும் சிந்தனையையும் எழுத்துக்காட்டும்படியான குறும் திரைப்படமொன்று அடங்கிய இறுவட்டுக்களை இலங்கையின் சகல விகாரைகளுக்கும் விநியோகிக்க இதனோடு ஒட்டியதாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.





வருகை தந்திருந்தவர்கள் சார்பாக வணக்கத்திற்குரிய பானகல உபதிஸ்ஸ நாயக்க தேரரும் வணக்கத்திற்குரிய ஓமல்பே சோபித்த நாயக்க தேரரும் உபந்நியாசம் நிகழ்த்தினர். கூட்டான ஆடல், பாடல் நிகழ்ச்சிகள் முதலிய பல்வேறு கலாசார நிகழ்வுகளினால் இவ்வைபவம் களை கட்டியது.

மேலும், ஸ்ரீமான் அநகாரிக தர்மபால அவர்களின் 154 ஆவது ஜன்ம தின நினைவுப் பெருவிழாவுடன் ஒட்டியதாக பௌத்த அலுவல்கள் திணைக்களத்தினால் ஒழுங்கு

செய்யப்பட்டிருந்த அகில இலங்கை அறநெறிப் பாடசாலைகளின் பேச்சு, பாஓதல், கட்டுரையாக்கம், திறந்த செய்யுள் ஆக்கப்போட்டி என்பவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் கௌரவ புத்தசாசன அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா அவர்களினால் வழங்கிவைக்கப்பட்டது.

ஜனாதிபதி அலுவலகமும் புத்தசாசன அமைச்சும் இணைந்து சாசன ரீதியிலும் தேசிய ரீதியிலும் மிக முக்கியமான ஒரு செயற்பணியை ஆற்றிய அநகாரிக தர்மபால அவர்களை நினைவுகூறும் வைபவத்தைஇவ்வாண்டிலும் வெற்றிகரமாக நடத்தின.

# 4. அபிவிருத்திச் சேவைகளை வழங்கல்

## ‘விஹாரஸ்தான கார்ய தர்சனய’ எனும் தகவல் குறிப்பேட்டை அச்சிட்டு விநியோகித்தல்

நாடு பூராவும் பரந்துள்ள பௌத்த விஹாரைகளில் இருக்கும் பிக்குமாரின் பயன்பாட்டுக்கு இந்நாட்குறிப்பேடு அச்சிடப்படுகிறது. இலங்கையில் இன்று இயங்கும் முத்திறத்து பௌத்த மத சிந்தனைப் பிரிவுகள் (நிக்காய) பற்றிய தகவல்கள், அவற்றோடிணைந்த ஏனைய மத சிந்தனைப் பிரிவுகளும் தரப்புகளும் பற்றிய தகவல்கள் முதலிய பிக்குமாருக்கு முக்கியமானதாக அமையும். தகவல்களை ஒன்றுகோர்த்து பௌத்த மத விஹாரைகளில் பயன்படுத்துவதற்கு உகந்தவாறு இந்நாட்குறிப்பேடு தயாரிக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் இக்குறிப்பேட்டின் 14,700 பிரதிகள் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டதுடன், அதற்கு ஏற்பட்ட செலவு 3.66 மில்லியன் ரூபாவாகும்.

2019 ஆம் ஆண்டிலும் ‘விஹாரஸ்தான கார்யதர்சனய’ நாட்குறிப்பேட்டின் 15,000 பிரதிகளை அச்சிட்டு விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

# 5. தகவல் தொழில்நுட்ப மற்றும் அபிவிருத்திப் பிரிவு

**தகவல் பிரிவினால் 2018 ஆம் ஆண்டில் ஆற்றப்பட்ட சேவைகள்:**

1. **உள்ளக கணினி வலையமைப்பைத் திருத்தலும் பராமரித்தலும்**
   புத்தசாசன அமைச்சின் உள்ளக கணினி வலையமைப்பை நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், LGN நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் அமைச்சின் 3 மாடிகளுக்கும் Wi-Fi வசதியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2. **பௌத்த தகவல் முறைமையைத் தயாரித்தலும் இற்றைப்படுத்தலும்.**
   புத்தசாசன அமைச்சும் பௌத்த அலுவல்கள் திணைக்களமும் இணைந்து கணினி வழிப்படுத்திய தகவல் முறைமையொன்றை உருவாக்கி தற்போது எல்லா பௌத்த விஹாரைகளும் சம்பந்தமான தகவல்களை ஒன்றுகோர்த்துள்ளன. மாவட்ட மட்டத்தில் இணைப்பு உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்து தகவல் முறைமைக்கு தகவல்களை உட்படுத்துவதும் இற்றைப்படுத்துதலும் பற்றிய பயிற்சியொன்று வழங்கப்படுகிறது. தற்போது குருணாகல், இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் இணைப்பு

உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்கும் பணி பூர்த்தியடைந்துள்ளதுடன், ஏனைய மாவட்டங்களில் இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3. அமைச்சின் இணையத்தளத்தை இற்றைப்படுத்தலும் பராமரித்தலும்.

அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் தற்போது இயங்கிவருவதுடன், நாளாந்தம் அதற்கு அவசியமான இற்றைப்படுத்தல்கள் இடம்பெற்று வருகின்றன.

### 4. அரச வெசாக் பண்டிகையை முன்னிட்டு DVD இறுவட்டுக்களை விநியோகித்தல்.

அரச வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஒழுக்கநெறிகளை மேம்படுத்துமுகமாக ஒழுக்கநெறிகள் அடங்கிய குறும் திரைப்படங்கள் கொண்ட DVD இறுவட்டுக்களை எல்லா விஹாரைகளுக்கும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. வெசாக் பூரணை தினத்தில் விஹாரைகளில் காட்சிப்படுத்த அவ்விஹாரைகளினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்மூலம் ஒழுக்கநெறிமுறைகளை ஊக்குவிப்பதற்கு அமைச்சின் ஒத்தாசை வழங்கப்பட்டது.

### 5. அமைச்சின் தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகளின் விருத்திக்கு உதவுதல்.

அமைச்சின் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், வன்பொருள்கள், மென்பொருள்கள் போன்றவற்றையும் சேவைகளையும் கொள்வனவுசெய்வதற்காக விவரக்குறிப்புகளைத் (specifications) தயார்செய்து வழங்குவதற்கும் அத்தகைய பண்டங்களைக் கொள்வனவுசெய்வதற்கும் தொழில்நுட்ப ரீதியான உதவி வழங்கப்பட்டது.

### 6. ஸ்ரீமான் அநகாரிக தர்மபால அவர்களின் ஜன்ம தின நினைவு தினத்தை முன்னிட்டு DVD இறுவட்டுக்களை விநியோகித்தல்.

ஸ்ரீமான் அநகாரிக தர்மபால அவர்களின ஜன்ம தினத்தை நினைவு தினத்தை முன்னிட்டு அன்னாரின் சுயசரிதை அடங்கிய 12,000 DVD இறுவட்டுக்கள் நாடுபூராவுமுள்ள எல்லா அறநெறிப் பாடசாலைகளுக்கும் விநியோகிக்கப்பட்டது. ஸ்ரீமான் அநகாரிக தர்மபால அவர்களின் சுயசரிதையை அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதிப்பதற்காக எல்லா அறநெறிப் பாடசாலைகளிலும் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 7. “ஜனாதிபதியிடம் சொல்லுங்கள்” நிகழ்ச்சித்திட்டம் - 2018 முன்னேற்றம்

| “ஜனாதிபதியிடம் சொல்லுங்கள்” நிகழ்ச்சித்திட்டம் - 2018 | | |
|---|---|---|
| மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை | பணிகள் பூர்த்தியடைந்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
| *205* | *164* | *41* |

(குறிப்பு *21)*

## 8.பௌத்த ஆலோசனைச் சபையை நடத்துதல் - 2018

சம்புத்த சாசனத்தின் நீடுறுதிக்கும் மத மற்றும் சாசன ரீதியாக ஏற்படக்கூடிய பிரச்சினைகளை நிவர்த்திக்கும் பொருட்டும் புத்தசாசன அமைச்சுக்கு அவசியமான ஆலோசனைகளை வழங்குவதற்கும் முப்பெரும் சிந்தனைப் பிரிவுகளின் (த்ரை நிக்காய) அதிவணக்கத்திற்குரிய மகாநாயக்க தேரர்களின் உபந்நியாசப்படி பௌத்த ஆலோசனை சபையொன்று நிறுவப்பட்டுள்ளது. சம்புத்த சாசனத்தின் பாதுகாப்புக் கருதி புத்தசாசன அமைச்சினால் எடுக்கப்படும் எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிடுவதில் அவசியமான சந்தர்ப்பங்களில் பௌத்த ஆலோசனைச் சபையைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதன்படி, *2018* ஆம் ஆண்டில் *33* மகாநாயக்க, அநுநாயக்க, நாயக்க சபா லேக்ககாதிகாரி தேரர்களின் பங்கேற்புடன் அவ்வாறான *06* கலந்துரையாடல்கள் இடைக்கிடை நடத்தப்பட்டுள்ளன.

இங்கு ‘பிக்சு கத்திகாவத்’ எனப்படும் பிக்குமாரின் உரையாடலொன்றைப் பதிவுசெய்யும் சட்ட வரைவு, பௌத்த விஹார தேவாலகம் (திருத்தச்) சட்டம், பௌத்த வெளியீடுகளைப் பிரசுரிப்பதை ஒழுங்குபடுத்தும் சட்ட வரைவு, தேரர்கள் சம்பந்தமான காப்புறுதித் திட்டங்களை ஏற்படுத்துதல், பௌத்த வங்கியொன்றை ஆரம்பித்தல், பேண்தகு புண்ணிய கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல், பௌத்த தர்மத்தையும் புனித திரிபிடகத்தையும் உருச்சிதைப்பதைத் தடுப்பதற்கான ஒரு வேலைத்திட்டத்தை வகுத்தல் முதலான முக்கிய பல விடயங்கள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டுள்ளதுடன், அவை சம்பந்தமாக எடுக்கப்பட்ட முக்கிய பல தீர்மானங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 9. மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தை நடத்துதல்

புத்தசாசன அமைச்சின் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை *2018* ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக மாதாந்தம் நடத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, அமைச்சினதும் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தினதும் நிதி மற்றும் மீண்டெழும் செலவு விடயங்கள் குறித்த பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம் குறித்து ஆராயப்பட்டதுடன், அவசியமான சந்தர்ப்பங்களில் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கும் தீர்மானங்களை

எடுப்பதற்கும் அவசியமான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இம்முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் கௌரவ அமைச்சர் காமினீ ஜயவிக்ரம பெரேரா அவர்கள் தலைமையில் புத்தசாசன அமைச்சினதும் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தினதும் பதவிநிலை உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் நடைபெற்றதுடன், 2018.12.31 ஆந் திகதியளவில் 11 கூட்ட அமர்வுகள் இடம்பெற்றுள்ளன.

## 10. இளைஞர், விளையாட்டு, கலை மற்றும் மரபுரிமைகள் பற்றிய பாராளுமன்ற மேற்பார்வைக் குழுக் கூட்டத்தில் பங்குபற்றல்

2018 ஆம் ஆண்டின் கடந்த காலப்பகுதியில் இளைஞர், விளையாட்டு, கலை மற்றும் மரபுரிமைகள் பற்றிய ஒரு பாராளுமன்ற மேற்பார்வைக் குழுக் கூட்டத்தில் அமைச்சு பங்கேற்றது. குழுவின் தலைவர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சி.பி.ரத்னாயக்க அவர்கள் தலைமையில் பாராளுமன்ற கட்டிடத்தொகுதியில் இக்குழுக் கூட்டம் நடைபெற்றது. அமைச்சின் நோக்கெல்லைக்கு உட்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தும்போது அந்தந்த மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கான ஒரு கலந்துரையாடலில் ஈடுபடுவதற்கும் விசாரிப்பதற்கும் இதன்மூலம் வாய்ப்புக் கிடைக்கிறது.

இங்கு அமைச்சின் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும்போது பின்பற்றப்பட்ட நடைமுறை பற்றி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது முன்னேற்றமொன்றைக் காண முடியும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இக்கருத்து, அமைச்சின் எதிர்காலப் பணிகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு உறுதுணையாக அமைவதாகும்.

புத்தசாசன அமைச்சினதும் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தினதும் சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் இதில் பங்குபற்றினர்.

## 11. நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டு முறைமை

| தலைப்பு | மீண்டெழும் செலவு | | | மூலதனச் செலவு | | |
|---|---|---|---|---|---|---|
| | 2018 மதிப்பீடு (ரூ.மி.) | 2018.12.31 அன்று உள்ளவாறான செலவு (ரூ.மி.) | முன்னேற்றம் % | 2018 மதிப்பீடு | 2018.12.31 அன்று உள்ளவாறான செலவு (ரூ.மி.) | முன்னேற்றம் % |
| புத்தசாசன அமைச்சு | 245.19 | 217.65 | 88% | 1078.51 | 867.79 | 80% |

(குறிப்பு 22)

## வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டின்படி *2018.12.31* அன்றுள்ளவாறான நிதிசார் முன்னேற்றம்

| செலவுத் தலைப்பு | | *2018* மதிப்பீடு | நி.ஒ. *66* மாற்றல்கள் | மேலதிக நிதி ஒதுக்கீடு | *2018* உள்ளபடியான மதிப்பீடு | *2018.12.31* அன்று உள்ளவாறான செலவு | *2018.12.31* அன்று உள்ளவாறான மீதி | நிதிஒதுக்கீடு தடுத்துவைத்தல் | நிதி ஒதுக்கீடு விடுவிப்பின் பின் மீதி | செல-வின சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **மீண்டெழும் செலவினம்** | **207,360,000** | **-709,264** | **38.544,000** | **245,194,736** | **217,265,438** | **27,929,298** | **5,863,639** | **22.065.659** | **88%** |
| **101-01-01** | **அமைச்சரின் அலுவலகம்** | 34,110,000 | -2,382,044 | 5,900,000 | 37,627,956 | 36,961,399 | 666,557 | | 666,557 | 98% |
| **101-01-02** | **அமைச்சின் நிர்வாக மற்றும் தாபன சேவைகள்** | 97,750,000 | 1,672,780 | 944,000 | 100,366,780 | 100,104,231 | 262,549 | | 262,549 | 99% |
| **101-01-06** | **புனித பகுதிகள் அபிவிருத்தி** | 75,500,000 | | 31,700,000 | 107,200,000 | 80,199,908 | 27,001,192 | 5,863,639 | 21,136,553 | 74% |
| | **மூலதனச் செலவுகள்** | 696,610,000 | 709.264 | 381,193,000 | 1,078,512,264 | 867,786,547 | 210,725,717 | 109,545,539 | 101,180,178 | 80% |
| **101-01-01** | **அமைச்சரின் அலுவலகம்** | 2,700,000 | -365,384 | | 2,334,616 | 2,344,616 | | | | 100% |
| **101-01-01** | **அமைச்சின் நிர்வாக மற்றும் தாபன சேவைகள்** | 4,910,000 | 1,074,648 | 3,884,000 | 9,868,648 | 9,717,270 | 151,378 | | 151,378 | 98% |
| **101-01-01** | **புனித பகுதிகள் அபிவிருத்தி** | 689,000,000 | | 377,309,000 | 1,066,309,000 | 855,734,661 | 21,574,339 | 109,545,539 | 101,028,800 | 80% |
| முழு மொத்தம் | | **903,970,000** | | **419,737,000** | **1,323,707,000** | **1,085,051,985** | **238,655,015** | **115,409,178** | **123,245,837** | **81%** |

(குறிப்பு *23*)

# *12.* உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளைத் திட்டமிடுதல்

### உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் ஆற்றப்பட்ட பணிகள்

### 12.1. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துதல்

*முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுச் சுற்றறிக்கை இல.DMA/2009(I) இன்படி குறைந்தபட்சம் காலாண்டுக்கு ஒருமுறை கூட்டங்கள் நடைபெற வேண்டும் என்பதுடன், 2018 ஆம் ஆண்டில் ஏற்கனவே 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.*

### 12.2. உள்ளக கணக்காய்வு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

*அமைச்சின் நிதி, நிர்வாக மற்றும் அபிவிருத்திப் பணிகள் உள்ளடங்கக்கூடிய விதத்தில் தயாரிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டின் அனுமதிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வுத் திட்டத்தின்படி ஆண்டினுள் 23 உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளில் அடங்கியுள்ள பிரேரணைகளை அமுல்படுத்துவதற்கு உரிய அதிகாரிகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.*

### *12.3. அமைச்சின் செயலாளரினால் ஒப்படைக்கப்பட்ட விசேட விசாரணை அறிக்கைகளை வழங்குதல்.*

I. *2018 அரச வெசாக் வைபவத்தை ஒட்டியதாக வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த பிங்கிரிய தேவகிரி ரஜமகா விகாரையின் அபிவிருத்திப் பணிகள் பற்றிய பரிசோதனை.*

II. *2018 அரச வெசாக் வைபவத்தை ஒட்டியதாக நடைபெற்ற “நிவன் மக விமசும” எனும் ஆராய்ச்சிபூர்வமான தர்ம உபந்நியாசத்தின் கொடுப்பனவுகள் பற்றிய பரிசோதனை.*

# *13.* புத்தசாசன நிதியம்

### புத்தசாசன நிதியத்தினால் அமுல்படுத்தப்பட்ட சில நிகழ்ச்சித்திட்டங்கள்

- *பிக்கு சீடர்களுக்கான (சாமனேர) உதவுதொகை (தாபரிப்பு) திட்டத்தை அமுல்படுத்துதல் (விசேட)*
- *பிக்கு சீடர் (சாமனேர) நிறுவனங்களைப் பதிவுசெய்தல்.*
- *நாடுபூராவும் அமைந்துள்ள கஷ்டப்புற விஹாரைகளுக்கு தாபரிப்பு உதவித் திட்டமொன்றை அமுல்படுத்துதல்.*
- *வயது முதிர்வில் துறவுநிலைபூண்ட பிக்குமாரின் துறவு வாழ்வுக்குரிய நடைமுறைகள் பற்றிய அறிவையும் அறநெறி அறிவையும் வளர்க்கும் நிகழ்ச்சித்திட்டம்.*
- *துப்புரவேற்பாட்டு வசதிகளுக்கான உதவி வழங்கும் கருத்திட்டம்.*
- *பிக்குமாருக்கான மருத்துவ உதவித் திட்டமொன்றை அமுல்படுத்துதல்.*
- *பௌத்த தர்ம நூல்களை அச்சிடுதல்.*

- ‘பாலி அட்டகத்தா’ ஏடுகளை சிங்களத்தில் மொழிபெயர்த்தலும் அச்சிடலும் விற்பனைசெய்தலும்.
- ‘பாலி ரீக்கா’ ஏடுகளை சிங்களத்தில் மொழிபெயர்த்தல்.
- ‘பாலி அட்டகத்தா’ ஏடுகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல்.

புத்தசாசன நிதியத்தின் ஊடாக அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்களின் முன்னேற்றம் பற்றிய *2018.12.31* அன்றுள்ளவாறான விபரம் வருமாறு:

**புத்தசாசன நிதியத்தின் ஊடாக அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்களின் முன்னேற்றம்**

| தொ. இல. | கருத்திட்டத் தின் பெயர் | விடயத்துறை | கருத்திட்டச் செயற்பாடுகள் | வருடாந்த இலக்கு | இன்றைய முன்னேற் றம் | நிதிசார் முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பிக்கு சீடர் (சாமனேர) நிறுவனங் களின் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | பிக்கு சீடர்களுக்கு முன்னேற்றத் தை ஏற்படுத்துதல். | பிக்கு சீடர்களின் உளப்பாங்குகளைக் கட்டியெழுப்புவதற்கு நிறுவப்பட்டுள்ள பிக்கு சீடர் நிறுவனங்கள்.<br>பிக்கு சீடர் கண்காணிப்புச் சபையை அனுமதித்தல்.<br>மாதாந்த நிதியுதவிக் கொடுப்பனவை மாணவர்களின் எண்ணிக்கைப்படி கொடுப்பனவு செய்தல். | *30* நிறுவனங் கள் | *18* நிறுவனங் கள் | *1,142,500.00* |
| 2 | பிக்கு சீடர் நிறுவனங் களின் ஆண்டு இறுதிப் பரீட்சை | பிக்கு சீடர் நிறுவனங் களின் பரீட்சைகளை மேற்பார்வை செய்தல் | பிக்கு சீடர் நிறுவனங்களின் இரண்டு ஆண்டு கால பயிற்சிக் காலத்தைப் பூர்த்திசெய்த தேரர்கள் தகுதி பெறுதல்.<br>பிரயோகப் பரீட்சை, எழுத்துமூல பரீட்சை ஆகிய இரண்டு பிரிவுகள்<br>விசேட திறமை காட்டிய பிக்குமாருக்கு புலமைப்பரிசில்களை வழங்குதல். | ஆண்டுதோறும் பரீட்சையை நடத்துதல்<br>-<br>டிசம்பர் 25 இல் வித்யாலங்கார பிரிவேனாவில். | | *516,775.00* |
| 3 | பிக்கு சீடர் தாபரிப்பு மாணவர் உதவித் திட்டம் | பிக்கு சீடர்களுக்கு முன்னேற்றத் தை ஏற்படுத்தல் | பிக்கு சீடர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு நிதியுதவி வழங்குதல். | *1350* பிக்கு சீடர்கள் | 850 பிக்கு சீடர்கள் | *5,958,886.00* |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | விஹாரைகளிலிருந்து முன்வைக்கப்படும் கோரிக்கைகளின்படி 03 ஆண்டு காலம் வழங்குதல். | | | |
| | | | மாதாந்தம் 700 வீதம் வழங்குதல். | | | |
| 4 | நாடுபூராவும் பிக்கு களுக்கு மருத்துவ உதவிக் கொடுப்ப னவு வழங்குதல் | வயது முதிர்ந்த பிக்குகளுக்கு தேவைப்படும் வசதிகளை அளித்தல். | கோரிக்கைகளின்படி பிரதேச செயலாளர்/ லேக்ககாதிகாரி அறிக்கைகளைக் கோருதல். | ஆண்டுக் குரிய இலக்கு 50 | கொடுப்பன வைப் பெறும் பிக்குகள் 44 | 2,229,000.00 |
| | | | நோயின் தன்மைப்படி நிர்வாக சபை அனுமதியுடன் சீவிய காலம் முழுவதும் அல்லது ஓராண்டு அல்லது ஈராண்டு கொடுப்பனவுகளைச் செலுத்துதல். | | | |
| 5 | வயது முதிர்ந்த காலத்தில் துறவு பூண்ட பிக்குகளுக் கு துறவு வாழ்வு சம்பந்தமான பிரயோக ரீதியான பயிற்சி வழங்குதல். | சீலம் மிக்க பிக்கு ஒருவரை உருவாக்குத ல். | மாவட்ட செயலாளர்/ பிரதேச செயலாளர்/ லேக்ககாதிகாரி ஊடாக 20 வயது தாண்டி துறவு பூண்ட பிக்குகளின் தகவல்களைத் திரட்டுதல். | ஆண்டுக் குரிய செயலம ர்வுகள் 08 | செயலமர்வு கள் 02 | 170,499.00 |
| | | | தீவு முழுவதையும் உள்ளடக்குதல். | | | |
| 6 | நாடுபூராவும் ட உள்ள கஷ்டப்புற விஹாரைக ளுக்கு துப்புரவேற் பாட்டு வசதிக்காக உதவி வழங்குதல் | விஹாரைகளி ன் பௌதிக அபிவிருத்தி. | கோரிக்கைப்படி பிரதேச செயலாளர்/ லேக்ககாதிகாரி அறிக்கைகளைக் கோருதல். | ஆண்டுக் குரிய இலக்கு 50 | 28 விஹாரைக ள் | 3,000,000.00 |
| | | | நிர்வாக சபையின் அனுமதிப்படி ரூ.100,000 வீதம் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு நிதியளித்தல். | | | |
| | | | முழு நாட்டையும் உள்ளடக்குகிறது. | | | |
| 7 | சீனமொழி மற்றும் கலாசார கற்கை | இளம் பிக்குகளுக்கு முன்னேற்றத் தை | சீன மொழியைக் கற்றுக்கொள்வதில் கரிசனையுள்ள பிக்குமாரை பிரதேச | 03 நிறுவன ங்கள் | 01 நிறுவனம் | 77,000.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | நிறுவனங்களை நிறுவுதல். | ஏற்படுத்துதல். | செயலாளர்/ சாசனாரசக்க பலமண்டல ஊடாக | | | |
| | | | 06 மாத கால அடிப்படை மொழி அறிவை வழங்குதல். | | | |
| | | | விசேட திறன்களைக் காட்டிய பிக்குமாரை டிப்ளோமா கற்கைநெறிக்குத் தெரிவுசெய்தல். | | | |
| | **மொத்தம்** | | | | | **8,902,998.00** |

(குறிப்பு 24)

# வடமேல் அபிவிருத்தி

## 2.1 வடமேல் மாகாண இணைந்த திட்டத்தைத் தயாரித்தல் (2017-2021)

வடமேல் மாகாணத்தை இலங்கையின் மிக உயர்ந்த அபிவிருத்தியடைந்த மாகாணமாக மாற்றியமைக்கும் நோக்குடன் வடமேல் அபிவிருத்தி அமைச்சினால் ஐந்தாண்டு இணைந்த திட்டமொன்றை (2017-2021) வகுத்தமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. வடமேல் மாகாணத்திற்கு உரித்தான விசேட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக வடமேல் மாகாணத்தின் முக்கிய உள்ளார்ந்த ஆற்றல்களையும் முக்கிய துறைகளையும் அடிப்படையாகக்கொண்டு மிகவும் உகந்த அபிவிருத்திக் கருத்திட்டங்கள் அடங்கிய 2017-2021 ஐந்தாண்டு உபாயமுறைத் திட்டத்தை வகுத்தமைப்பதற்கும், ஐந்தாண்டு நிறுவனத் திடத்தின் கூறுகளாக மூன்றாண்டு (2018-2020) முதலீட்டுத் திட்டத்தையும் ஓராண்டு (2017) செயற்பாட்டுத் திட்டத்தையும் தயாரிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இணைந்த திட்டத்தை வகுத்தமைக்கும்போது தொழில்நுட்ப உதவியை வடமேல் மாகாண கைத்தொழில் சேவைகள் பணியகம் வழங்கியது.

**i. வடமேல் இணைந்த திட்டத்தின்கீழ் அடையாளம் காணப்பட்ட முக்கிய துறைகள்:**

1. விவசாயமும் நீர்ப்பாசனமும்
2. கால்நடை வளர்ப்பும் மீன்பிடியும்
3. முதலீட்டு ஊக்குவிப்பு, கைத்தொழில் அபிவிருத்தி, சுற்றுலா
4. தொழிற்பயிற்சியும் வாழ்வாதார அபிவிருத்தியும்
5. கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் (கிராமிய வீதிகள், கிராமிய சந்தை, மின்சாரம், எரிசக்தி, குடிநீர்...)

மேற்குறிப்பிடப்பட்டவாறு பொதுவாக இணக்கம் காணப்பட்ட முக்கிய துறைகளை அடிப்படையாகக்கொண்டும் அமைச்சிற்கு உரித்தாக்கப்பட்ட செயற்பொறுப்பு, பொறுப்புக்கள், வரையறுத்த வளங்கள் என்ற விடயங்களைக் கருத்திற்கொண்டும் இலங்கை அரசாங்கத்தின் நடுத்தர கால மற்றும் நீண்ட கால முழுதளாவிய பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகளுகளை அனுசரித்து, மொத்தத் தேசிய உற்பத்திக்கு வடமேல் மாகாணத்தினால் வழங்கப்படும் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்குடன் 2017-2021 வரையான காலத்திற்குரிய இணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டது.

***2.2.10*** *வடமேல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் துறைகள்/ பிரிவுகள்:*

- விவசாய, சிறிய மற்றும் நடுத்தர அளவான நீர்ப்பாசனங்களின் புனரமைப்பு.
- கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி:
  - கிராமிய வீதிகளின் அபிவிருத்தி.
  - விசேட வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (குருணாகல் நகரை மையமாகக்கொண்ட)

- சமுதாய அடிப்படையிலான குடிநீர் வழங்கல் திட்டங்களை அமுல்படுத்தல்.
- சிறிய நகரங்களின் அபிவிருத்தி.
- சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்.
- முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்.
- தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம்.
- கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.
- விசேட அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்துதல்.

### *2.3 நிதி ஒதுக்கீடும் நிதிசார் முன்னேற்றமும் - 2018*

*2018 வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டின் படி 1,234 மி.ரூ. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் கருத்திட்டங்களை அமுல்படுத்தும்போது பூர்த்திசெய்யப்பட்ட கருத்திட்டங்களின் விலைப்பட்டிகளை செலுத்தித்தீர்ப்பதற்கு கட்டுநிதி போதியதாக இல்லாமை காரணமாக 2017.12.31 ஆந் திகதியில் உள்ளவாறு கையிலுள்ள விலைப்பட்டிகளை செலுத்தித் தீர்ப்பதற்கு ரூ.234.37 மி.ரூ. தொகையும் 2017 இல் எஞ்சியுள்ள கருத்திட்டங்களுக்கு ரூ.46.25 மி.ரூ. தொகையும் செலவிடப்பட்டது.*

| கருத்திட்டங்கள் | தொகை (ரூ.மி.) | *2017.12.31* அன்று உள்ளவாறான செலவு (ரூ.மி.) |
|---|---|---|
| நீர்ப்பாசன அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | 130.12 | - |
| வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | 222.82 | 224.51 |
| குடிநீர்க் கருத்திட்டங்கள் | 3.00 | 3.01 |
| சிறிய நகரங்கள் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | 7.50 | 6.85 |
| எஞ்சிய கருத்திட்டங்கள் | 120.00 | 46.25 |
| **மொத்தம்** | **483.44** | **280.62** |

### 2.3 அமுலிலுள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் - *2018*

*2018 இல் அமுலிலுள்ள திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிஒதுக்கீட்டின் அளவு 750.00 மி.ரூ. ஆகும். 2018.12.31 ஆந் திகதி வரையில் 756.23 மி.ரூ. தொகை மட்டும் 493 பெறுமதியான கருத்திட்ட மதிப்பீடுகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளன.*

### 1. *நீர்ப்பாசன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்*

*வடமேல் மாகாண விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை மிகவும் வினைத்திறனாகவும் பயன்கூர் விதத்திலும் அமுல்படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சிறிய நீர்ப்பாசன புனரமைப்புப் பணிகளை மேலும் முன்னெடுத்துச்சென்று 2018 ஆம் ஆண்டில் சிறிய நீர்ப்பாசனக் கருத்திட்ட புனரமைப்புப் பணிகள் மேலும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஊடாக 07 கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதுடன், அவற்றுக்கு 12.5 மி.ரூ. நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஊடாக 17 கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதுடன், அவற்றுக்காக 34.21 மி.ரூ. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2018.12.31 அன்றுள்ளவாறான செலவு 7.99 மி.ரூ. ஆகும். அதன் நிதிசார் முன்னேற்றம் 69.03 சதவீதமாகும்.*



***பிங்கிரிய முத்தெட்டுவ நீர்த்தேக்கம்***

### 2. *கிராமிய வீதிகளின் அபிவிருத்தி*

*2018 ஆம் ஆண்டில் 360 வீதிகளை கொங்கிறீட், தார், கல் பதித்து முன்னேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கூறியவாறு முன்னேற்றுவதற்கு நிதிஒதுக்கீடு போதியதாக இன்மை காரணமாக நிக்கவரெட்டிய, மஹவ, பொல்பித்திகம, வாரியபொல, பொல்காவலை போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள அதிகஷ்டப்புற வீதிகளை வயம்ப இயந்திர உபகரணங்கள் அதிகாரசபையும் தேசிய இயந்திர உபகரணங்கள் நிறுவனமும் ஊடாக மோட்டார் கிறேடர் செய்வதன்மூலம் 117 கி.மீ. வீதிகளை அபிவிருத்திசெய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது 57 வீதிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பெறுமதி 4.7 மி.ரூ. ஆகும்.*

*கொங்கிறீட், தார், கல் பதித்து முன்னேற்றத் திட்டமிடப்பட்டுள்ள 65 கி.மீ. நீளமான வீதிகள் முன்னேற்றப்பட்டு வருகின்றன. தற்போது 223 வீதிகளுக்கான அனுமதி கிடைத்துள்ளதுடன், அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பெறுமதி 554.08 மி.ரூ.*

ஆகும். 2017 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள கருத்திட்டங்களுக்கு 35.05 மி.ரூ. தொகை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.



*கொஸ்கொல்ல வேகமகோனிகொட பாலம்*





*பொத்துவேபிட்டிய – பொல்பித்திகம வீதி*

## 3. குடிநீர்க் கருத்திட்டங்களை அமுல்படுத்தல்

வடமேல் மாகாண உலர் வலய பிரதேசங்களின் தீவிர குடிநீர்ப் பற்றாக்குறையும் நிலக்கீழ் நீரிலுள்ள அதிகளவான உவர்ப்புத்தன்மையும் காரணமாக ஏற்படக்கூடிய சிறுநீரக உபாதைகளுக்கு ஒரு தீர்வாக தேசிய நீர்வழங்கல் சபையும் வடமேல் மாகாண நீர்ப்பாசனக் பிரிவும் இணைந்து 2018 ஆம் ஆண்டில் அடையாளம் கண்ட கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு 100 மி.ரூ. தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது 03 நீர்ப்பாசனத் திட்டங்களின் பணிகள் பூர்த்தியடையும் தறுவாயில் உள்ளதுடன், எஞ்சிய கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 20.5 மி.ரூ. தொகை இதற்காகச் செலவிடப்பட்டுள்ளது.



*பிலாகட்டுமுல்ல குடிநீர்க் கருத்திட்டம்*

## 4. சிறிய நகரங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

*2018 ஆம் ஆண்டில் சிறிய நகரங்களின் அபிவிருத்தியின் கீழ் வாரியபொல பொருளாதார நிலையத்தின் புனரமைப்பிற்கு 15 மி.ரூ. நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், புனரமைப்புப் பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.*

## 5. தேசிய உணவு உற்பத்தி மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

*'யொவுன்புர-2018' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு விவசாயம், கால்நடைவளர்ப்பு, மீன்பிடி ஆகிய துறைகளின்கீழ் சுயதொழில்களில் ஈடுபடுத்துவதற்காக 05 மி.ரூ. நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. இதன்கீழ் தற்போது விவசாய, மீன்பிடித் துறைகளின் கீழ் வர்த்தக ரீதியான மலர்ச் செய்கை, அலங்கார மீன் வளர்ப்பு என்ற 02 கருத்திட்டங்கள் வடமேல் மாகாண விவசாயத் திணைக்களமும் இலங்கை தேசிய நீரகவளர்ப்பு அபிவிருத்தி*

அதிகாரசபையும் மூலம் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 02 கருத்திட்டங்கள் 2018.12.31 ஆந் திகதியுடன் முடிவுறுத்தப்பட்டு விலைப்பட்டிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## 2.4 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்த உத்தேசிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்

வடமேல் மாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேலும் உயர்த்துவதற்கு 2016 ஆம் ஆண்டு தொடக்கம் அமுல்படுத்தப்பட்டுவரும் நிகழ்ச்சித்திட்டங்களுடன் விசேடமாக அடையாளம் காணப்பட்ட கருத்திட்டங்களை அமுல்படுத்தல் 2019 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டம் | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | பெறுமதி (மி.ரூ.) |
|---|---|---|---|
| 1. | வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 595 | 1,364.00 |
| 2. | நீர்ப்பாசன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 238 | 329.00 |
| 3. | குடிநீர்க் கருத்திட்டங்களை அமுல்படுத்துதல் | 42 | 257.00 |
| | **மொத்தம்** | **875** | **1,950.00** |